# உதயன்

விலை ரூபா [illegible].00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 14 வியாழக்கிழமை (29-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:183


# இடைக்கால நிர்வாகம் இல்லை
# பதிலாக மாற்றுக் கட்டமைப்பே!

## அதிலும் புலிகளின் பிரதிநிதித்துவம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை

கொழும்பு,மே29

**வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் என்று புலிகள் விடுத்த கோரிக்கை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதில் புலிகளுக்கு உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டுவிட்டது.**

**பிரதமரின் பதில் யோசனையில் இடைக்கால நிர்வாகம் என்ற கதையே இல்லை. வடக்கு - கிழக்கு அபிவிருத்தி சம்பந்தமான மாற்றுக் கட்டமைப்பு ஒன்று குறித்தே பிரதமர் பிரஸ்தாபித்துள்ளார்.**

**அதில் விடுதலைப் புலிகளின் பங்கு, பணி குறித்தோ பிரதிநிதித்துவம் குறித்தோ தெளிவான விளக்கங்கள், வரையறைகள் இல்லை.**

**கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.**

பிரதமர் அனுப்பிவைத்துள்ள யோசனைகள் தொடர்பாக அந்த வட்டாரங்களில் இருந்து கசிந்துள்ள தகவல்கள் வருமாறு:-

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்புத் தொடர்பாக உயர்மட்ட ஆலோசனைக் குழு (Apex Body) ஒன்று இருக்கும். இந்தக் குழுவின் பிரதிநிதித்துவம் வடக்கு - கிழக்கிலுள்ள மூன்று இனங்களினதும் சனத்தொகை விகிதாசாரப்படி வழங்கப்படும்.

இதில் தமிழர்களை அவர்களின் உண்மையான பிரதிநிதிகள் பிரதிநிதித்துவப்படுத்துவார்கள். அவர்கள் புலிகளா அல்லது நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளா என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. ஒரு மயக்கமான தோற்றத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் வார்த்தைப் பிரயோகம் அமைந்துள்ளது.

இந்த உயர்மட்டக் குழுவை

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைச் சந்தித்து விளக்குவதற்கு சொல்ஹெய்ம் பகீரதப் பிரயத்தனம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள மாற்றுத்திட்டம் குறித்து புலிகளுக்கு விளக்கமளிக்க நோர்வேயின் அனுசரணைக்குழுப் பிரமுகர் எரிக் சொல்ஹெய்ம் விடாப்பிடியாக முயன்றாராயினும் அது பலனளிக்கவில்லை என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமரின் பதிலை நேரடியாகக் கிளிநொச்சிக்குக் கையில் எடுத்துச் சென்று அதில் உள்ள சில அம்சங்கள் குறித்து தானும் தன்னுடன் செல்லவிருந்த ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரி மூலமும் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு விளக்கமளிக்க எரிக் சொல்ஹெய்ம் விரும்பினார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதற்காக விடாப்பிடியாக அவர் முயன்றார். புலிகளோடு பல வழிகளிலும் தொடர்புகொள்ள அவர் பிரயத்தனப்பட்டார். ஆனால், பலன் கிட்டவில்லை.

"எழுத்தில் இருப்பதை அனுப்புங்கள், பரிசீலிக்கின்றோம். வசனங்களுக்கு இடையில் - எழுத்தில் குறிப்பிடப்படாமல் - இருக்கக்கூடிய - வாய் மூலம் தெரிவிக்கப்படுகின்ற விடயங்கள் குறித்துப் பிறகு பரிசீலிக்கலாம் என்று புலிகள் தரப்பிலிருந்து அவ

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புக்கு உட்பட்ட வகையில் பிரதமரின் பதிலில் மாற்று யோசனை

### அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு,மே29

"புலிகளின் கோரிக்கைகளை அங்கீகரிக்கும் வகையில் பிரதமரின் பதில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஆனால், அப்பதில் இடைக்கால நிர்வாகசபை பற்றியதல்ல. இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்ட வகையில் எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கட்டமைப்புப் பற்றியதாக பிரதமரின் பதில் அமைந்துள்ளது. நிச்சயமாகப் புலிகளும் அதனை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை அரசுக்கு உண்டு".

- அரசியல் விவகார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

இடைக்கால நிர்வாகசபை என்பது ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகளால் கைவிடப்பட்ட ஒரு விடயம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் நேற்றுக் காலை மின் தாக்கி இளைஞன் பலி!

கோப்பாய்,மே29

கோப்பாய் தெற்கு நாவலர் பாடசாலைக்கு அருகே நேற்றுக் காலை மின் தாக்குதலுக்கு ஆளாகி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

அப்பகுதியில் வீதியில் உள்ள மின்கம்பம் ஒன்றின் பாதுகாப்புக்காக தரையோடு சேர்த்து நிறுவப்பட்டிருந்த கேபிள் கம்பியில் மின் பாய்ந்ததால் இந்த அனர்த்தம் நேர்ந்தது என்று கூறப்படுகிறது.

மின்கம்பத்தை உறுதியாகப் பற்றி நிற்பதற்காகக் கட்டப்பட்ட கம்பி அருகே உள்ள வீட்டு வளவினுள் தரையில் இணைக்கப்பட்டிருந்தது. பிரஸ்தாப இளைஞர் அந்தக் கம்பியைக் கைகளால் பற்றியபோது மின் தாக்குதலுக்கு உள்ளானார் என்று கூறப்படுகிறது.

மின் தாக்குண்ட இளைஞன் அந்த இடத்திலேயே நீண்டநேரம் நின்றுகொண்டிருப்பதைக் கண்ட அயலவர்கள் அருகே சென்று பார்த்தபோது அவரை மின்சாரம் தாக்கியிருந்தது தெரியவந்தது. உடனடியாக

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய கம்பனி மூலம் இனி இலங்கையில் எரிபொருள்கள்

### 100 நிலையங்கள் மறுசீரமைப்பு

கொழும்பு,மே29

இலங்கையில் இந்திய எரிபொருள் விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

முதற்கட்டமாக நாட்டில் உள்ள சுமார் 100 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இதற்கென நவீன மயப்படுத்தப்படவுள்ளன. சுமார் 100 கோடி அமெரிக்க டொலர் செலவில் லங்கா இந்தியன் எண்ணெய்க் கம்பனி (லங்கா ஐ.ஓ.சி) இந்தப் பணிகளை ஆரம்பிக்கின்றன.

எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்துவைப்பதற்காக இந்திய எண்ணெய்வள அமைச்சர் ராம்நாயக் நேற்றுமுன்தினம் கொழும்பு வந்தார். அவர் நேற்று மாளிகாவத்தையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' மீது சீறிப்பாய்கிறார் அமெரிக்கத் தூதரக அதிகாரி

யாழ்ப்பாணம்,மே29

'உதயன்' மீது சீறிப்பாய்ந்தார் அமெரிக்கத் தூதரக அதிகாரி.

அண்மைக் காலமாக அமெரிக்கா குறித்து அவதூறான - உண்மைக்குப் புறம்பான - செய்திகளையே உதயன் பத்திரிகை வெளியிட்டு வருகின்றது என்றும் அவர் காட்டமாகச் சாடினார்.

அமெரிக்கத் தூதரகத்தில் வெகுசனத் தொடர்பு சம்பந்தமான பிரிவில் பணியாற்றும் பத்மினி இராஜதுரை என்ற பெண் அதிகாரியே இப்படி சீறிப்பாய்ந்தார்.

அமெரிக்கத் தூதரக அரசியல் அதிகாரி கிறிஸ் லோங் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரின் வருகை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு - அவர் பங்குபற்றும் நிகழ்வு ஒன்று இடம்பெற்ற - யாழ்.பீச் இன் ஹோட்டலுக்கு உதயன் செய்தியாளர் சென்றிருந்தார்.

அதிகாரி கிறிஸ் லோங்குடன் அச்சமயம் பத்மினி இராஜதுரையும் நின்றிருந்தார்.

ஹோட்டல் முன்பகுதியிலேயே உதயன் செய்தியாளரைப் பார்த்து அடையாளங் கண்டுகொண்ட அவர், உடனேயே சீறிப்பாய்ந்தார்.

"அண்மைக்காலமாக அமெரிக்காவைப்பற்றியும் அதன் செயற்பாடுகளைப் பற்றியும் 'உதயன்' பத்திரிகை உண்மைக்கு மாறான தகவல்களையும் விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்றது.

"இது ஒரு விஷமத்தனமான வேலை அமெரிக்க அரசைப் பிடிக்கவில்லையென்றால் பேசாமல் இருந்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## 41 குடும்பங்கள் நேற்று முல்லைத்தீவு திரும்பின

வவுனியா,மே29

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதிமுகாம்களில் வசித்து வந்த 41 குடும்பங்களைச் சேர்ந்த 186பேர் நேற்று தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

வவுனியா, பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் ஆகிய இடங்களில் உள்ள அகதிமுகாம்களில் நீண்ட காலமாக வசித்து வந்தவர்களே மீளக்குடியமரும் நோக்குடன் தற்போது வீடு திரும்பியுள்ளனர் என வவுனியா செயலக வட்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு பிரதமரின் பதில் வன்னியில் நேற்று கையளிப்பு

கிளிநொச்சி,மே29

வடக்கு - கிழக்குக்கு அதிக அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தேவை என்ற புலிகளின் கோரிக்கை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதில் நேற்று விடுதலைப் புலிகளிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு விசேட ஹெலிகொப்டரில் வந்த நோர்வேத்தூதரக அதிகாரிகள் இருவர் கடிதத்தைக் கையளித்தனர்.

நோர்வேத் தூதரக அதிகாரியான லொசீட் (Logceid), 2ஆம் [illegible] செயலாளர் தோமஸ் றெக்கிலவை ஆகியோரே ஹெலி மூலம் நேற்று நண்பகல் கிளிநொச்சி வந்தடைந்தனர்.

பதில் கடிதத்தை சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனிடம் கையளித்துவிட்டு உடனேயே அவர்கள் கொழும்பு திரும்பினர்.

இதேவேளை -

பிரதமரின் பதில் கடிதம் அனுப்பப்படுவது தொடர்பான தகவலை நேற்றுமுன்தினம் நோர்வேத் தூதரகம் புலிகளின் கிளிநொச்சி அரசியல் துறை பணிமனைக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பியிருந்தது.

(ஐ-3)

## நவக்கிரியில் இன்று மறியல்!

புத்தூர், நவக்கிரிப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்க எடுக்கப்படும் முயற்சியை நிறுத்துமாறு கோரி இன்று காலை அப்பகுதியில் மறியல் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

வலி.கிழக்குப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் போராட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஒன்று திரண்டு பங்கேற்பர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-86)

# மக்கள் வாழ்விடங்களை விட்டு படையினர் அகலாதவரை இயல்பு நிலை தோன்றாது!

## அமெரிக்கத் தூதரக அதிகாரியிடம் அரச அதிபர் பத்மநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே29

பொதுமக்களின் வாழ்விடங்கள் மற்றும் தொழிலிடங்கள் என்பன இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்படாதவரை யாழ.குடாநாட்டுப் பொதுமக்களின் வாழ்வில் இயல்பு நிலை தோன்றிவிட்டது எனக் கூற முடியாது.

- இவ்வாறு நேற்று அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அதிகாரி கிறிஸ் லோங்கைச் சந்தித்துக் கலந்துரையாடிய யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

இச்சந்திப்பு யாழ். பீச் ஹோட்டலில் இடம்பெற்றது.

யாழ்.குடாநாட்டு மக்களின் வாழ்க்கையில் இயல்புநிலை தோன்றியுள்ளதா என்று அமெரிக்கத் தூதரக அரசியல் அதிகாரி யாழ்.அரச அதிபரிடம் கேள்வி எழுப்பியபோதே யாழ். அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் பொதுமக்களின் நிலைமைகள், அவர்களுக்கான புனர்வாழ்வு நிவாரண உதவிகள், தற்போதைய குடாநாட்டு அரசியல் நிலைமை, விடுதலைப் புலிகளின் ஆளசேர்ப்பு என்பன தொடர்பாக அமெரிக்கத் தூதரக அதிகாரி யாழ்.அரச அதிபரிடம் கேள்விகளை எழுப்பினார்.

அரச அதிபர் அக்கேள்விகளுக்கு பதிலளிக்கையில் கூறியதாவது:-

குடாநாட்டில் பெருமளவு எண்ணிக்கையான பொதுமக்களின் வாழ்விடங்கள், விவசாய நிலங்கள் என்பன உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் முடக்கப்பட்டுள்ளன. இதனால, பொதுமக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் மீளக்குடியமர முடியாதுள்ளனர். அவர்களது விவசாய நிலங்களும் விவசாயம் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதைவிட, கடற்கரைபிரதேசங்கள் அனைத்தும் கடற்படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ளன. மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கபபட்டுள்ளபோதிலும், மீனவர்கள் இரவு வேளையில் கரைதிரும்புவதற்கு அனுமதியில்லை. இதனால், அவர்கள் சுதந்திரமாகத் தமது தொழிலில் ஈடுபடமுடியாதுள்ளனர்.

மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களில் 5ஆயிரம் குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு நிதி வழங்கப்பட்டுள்ளது. 35ஆயிரம் குடும்பங்கள் இந்நிதி கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளன. எனினும், அவர்களுக்கு அதை வழங்குவதற்கு எம்மிடம் போதிய நிதி நிலைமை இல்லை. இதனால் மெதுவாகவே இந்த மீள்குடியமர்வு நிதியை 'வழங்கி வருகின்றோம்.

யாழ்.குடாநாட்டு அரசியல் நிலைமைகளைப் பொறுத்தவரை 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளின் போக்கையும் அரசியல் வழிமுறைகளையும் நேரடியாக ஆதரிக்கின்றனர். மற்றொருவர் அரசாங்கத்தில் அமைச்சராக உள்ளார். ஏனைய இருவரும் ஈ.பி.டி.பி.கட்சியைச் சார்ந்தவர்கள்.

விடுதலைப் புலிகள் தமது இயக்கத்துக்கு ஆள்களைச் சேர்க்கிறார்கள் என்பது தொடர்பாக இதுவரை எனக்கு எந்த • முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை.

இவ்வாறு அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரையும் அமெரிக்கத் தூதரக அரசியல் அதிகாரி சந்திந்துக் கலந்துரையாடினார். பின்னர் சரசாலைப் பகுதிக்குச் சென்ற இவர், அங்கு மொஸாம்பிக் நாட்டவர்களால் மேற்கொள்ளப்படும் மிதிவெடி அகற்றும் பணியையும் பார்வையிட்டார்.

(ஐ-8)

# 40நிர்வாக அதிகாரிகளுக்கு செயலகத்தில் விசேட பயிற்சி

யாழ்ப்பாணம்,மே29

யாழ்.மாவட்டத்தில் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பாக 40 நிர்வாக அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான மூன்று நாள் செயலமர்வு இன்று யாழ்.செயலகத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

திட்டங்களை இனங்காணுதல், அத்திட்டங்களை முறைப்படி தயாரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள போதிய அனுபவம் உள்ள அதிகாரிகள் இல்லாதிருக்கின்றனர்.

இது தொடர்பாக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் விடுத்த கோரிக்கையை அடுத்து பிரதமர் அலுவலகத்தின் அனுசரணையுடன் இந்தச் செயலமாவு நடத்தப்படுகின்றது.

இந்தச் செயலமர்வை பிரதமர் அலுவலகத்தின் திட்டமிடல் பிரிவு அதிகாரிகளும் ஆலோசகர்களும் நடத்தவிருக்கின்றனர்.

இதற்காக பிரதமர் அலுவலகத்தில் இருந்து 7 அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (ஐ-3)

# ஜனாதிபதியுடன் பேசி, முடிவுகாணவே விருப்பம் அதற்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை

## லொத்தர் சபை விவகாரம் குறித்து அமைச்சர் பீரிஸ் பதில்

கொழும்பு,மே29

அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்ந்தும் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் நிர்வாகத்திலேயே உள்ளது. நாம் அரசியல் அமைப்பு விதிகளுக்கு அமையவே செயற்படுகின்றோம். பிரதமரோ அல்லது அமைச்சரவையோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் அமைப்பு விதிகளை மீறவில்லை. இப்போதும் கூட காலம் கடந்தவிடவில்லை. லொத்தர் சபை விவகாரம் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசி சுமுகமான முடிவைக் காணவே பிரதமர் விரும்புகிறார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில் அமைச்சர் பீரிஸ் இவ்வாறு கூறினார்.

'ஜனாதிபதியின் உத்தரவை அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலை அச்சிடவேண்டாம் என்று மக்கள் தொடர்பாடல் அமைச்சர் அரசாங்க அச்சகருக்கு விடுத்த உத்தரவை உடனடியாக வாபஸ்பெறவேண்டும். இல்லையேல் அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்' என்று ஜனாதிபதி அறிவித்திருப்பது பற்றி அரசின் நிலைப்பாடு என்ன? என்று செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதில் அளித்த அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

நாட்டின் சட்டம், அரசியல் யாப்பு என்பன தொடர்பாக ஆலோசனை வழங்கும் சகல அதிகாரங்களையும் கொண்ட அதியுயர் பதவி வகிப்பவர் சட்டமா அதிபர். ஜனாதிபதி உட்பட ஒவ்வொரு பிரஜையும் சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கு உரிய கௌரவம் அளிக்கவேண்டும்.

அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரம் தொடர்பாக சட்டமா அதிபர் எழுத்து மூலமான ஆலோசனையை ஜனாதிபதிக்கு அறிவித்துவிட்டார். நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்ற அதிகாரமும் ஒரே கட்சியிடம் இருந்தால் ஜனாதிபதி தன்னிச்சையாகச் செயற்படலாம் ஆனால் நாடாளுமன்ற அதிகாரம் எம்மிடம் இருக்கின்றது.

எனவே, "எந்த ஒரு மாற்றத்தையும் செய்யும் முன் ஜனாதிபதி பிரதமருடன் கலந்தாலோசிக்கவேண்டும். இத்தகைய ஆலோசனை அவசியமானது" எனவும் சட்டமா அதிபர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பிரதமர் ஜனாதிபதியுடன் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றார். அவசியமேற்படின் இதனை அமைச்சரவையிலும் விவாதிக்க இடமுண்டு.

எந்த எச்சரிக்கை குறித்தும் நாம் அலட்டிக்கொள்ளவில்லை - இவ்வாறு அவர் சொன்னார். (எ)

### அமைச்சர் மிலிந்த நேற்று ஜப்பான் பயணம்

கொழும்பு,மே29

ஜப்பான் உதவி வழங்கும் மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக ஆராய்வதற்காக பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று மாலை ஜப்பான் பயணமாக இருந்தார் என்று அமைச்சு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜப்பான் அமைச்சரவைச் செயலாளர் உட்பட பல முக்கிய அதிகாரிகளையும் மொறகொட சந்தித்துப் பேசுவார்.

### நூலக கற்கை நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,மே29

இலங்கை நூலகச் சங்கத்தால் நடத்தப்படும் 'நூலகமும் தகவல் விஞ்ஞானமும்' கற்கை நெறியின் தரம் ஒன்றிற்கான 2003-2004 ஆண்டுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விவரங்களை யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று பல்கலைக்கழக நூலகர் ரோ.பரராஜசிங்கம் அறிவித்திருக்கிறார். (ஐ)

அரச காணிகளை அடையாளம் காண்பதற்கு

# பிரதேச வரைபடங்களை படையினர் கோருகின்றனர்

யாழ்ப்பாணம்,மே29

குடாநாட்டில் சில பகுதிகளின் வரைபடங்களை படையினர் யாழ். செயலகத்திடம் கோரியுள்ளனர்.

பொதுக் கட்டடங்கள் மற்றும் வீடுகளில் உள்ள முகாம்களை வேறு இடங்களுக்கு இடம்மாற்ற வசதியாக இந்த வரைபடங்கள் கோரப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

யாழ்.கோட்டைப் பகுதி, பழைய பூங்கா, நவக்கிரி நன்னீர் கிணற்றடி, கந்தரோடை ஆகிய பிரதேசங்களின் வரைபடங்களையே படை அதிகாரிகள் செயலகத்திடம் கோரியுள்ளனர்.

அந்தப் பிரதேசங்களில் உள்ள அரச காணிகளில் முகாம் அமைக்கும் நடவடிக்கைக்காகவே வரைபடங்கள் சேகரிக்கப்படுவதாக சந்தேகிக்கப்படுகிறது.

(ஐ-3)

யாழ்.கோட்டைப் பகுதியில்

# முகாம் அமைக்கும் பணியை படையினர் கைவிட்டனரா?

அரியாலை,மே29

யாழ். கோட்டையில் இராணுவ முகாம் அமைக்கும் பணிகளை படையினர் இடைநிறுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

இராணுவ முகாம் அமைப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக அந்தப் பகுதி யில் சில வாரங்களுக்கு முன் படையினர் ஆரம்பித்த பூர்வாங்கப் பணி கள் கடந்த சில நாள்களாக நிறுத் தப்பட்டுள்ளன.

கோட்டைப் பகுதியில் புதிதாக இராணுவ முகாம் அமைப்பதற்கு பல தரப்புகளில் இருந்து எதிர்ப்புகள் கிளம்பியதை அடுத்து முகாம் அமைக்கும் பணிகளை படையினர் கைவிட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

(ஐ-17)





இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகம் நேற்று ஆஸ்பத்திரி வீதியில் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் சிரேஷ்ட முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம், வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், பொது முகாமையாளர் எஸ்.என்.பி.பளிஹேன, பிரதிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.சி.பெர்னாண்டோ, யாழ்.அரசஅதிபர் செ.பத்மநாதன், சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.விக்னராஜா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள் : தேவா)*

# இன்றுமுதல் ஜூன் 4வரை சூழல் விழிப்புணர்வு வாரம்

## எழுச்சியுடன் அனுஷ்டிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே29

உலக சூழல் தினத்தை முன்னிட்டு, இன்றுமுதல் எதிர்வரும் 4ஆம் திகதிவரை சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து தமிழீழ பொருண்மிய மதியுரையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-


கடந்த 20வருட யுத்தத்தின் காரணமாக தமிழீழப் பகுதிகளில் 15 லட்சம் தென்னை மரங்களும் 32 லட்சம் பனைமரங்களும் பல லட்சம் பழ மரக் கன்றுகளும், பல ஆயிரம் ஏக்கர் காடுகளும் அழிக்கப்பட்டுள்ளன.

நாளாந்தம் பிளாஸ்ரிக் பொருள்கள், பொலித்தீன், கிருமி நாசினிகள், உரவகைகளின் பாவனையும் அதிகரித்துள்ளது. இதனால் சூழலின் சமநிலை பாதிப்படைந்துள்ளதுடன், பல்வேறு தாக்கங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலைமையில் எமது சூழலைப் பாதுகாக்கவும், மாணவர்களுக்கும் மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் கழிவுப் பொருள்களை மீள் பாவனைக்கு உட்படுத்துவதற்கும் சூழல் பாதுகாப்பு தொடர்பான கூடிய கவனம் எடுக்கவேண்டியுள்ளது. - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

**இயற்கையான சூழலில் வாழ்வோமென - உறுதியெடு**
**வளமான வாழ்க்கை உனதாகும் - எண்ணிப் பெருமைப்படு!**
(மே 29 முதல் ஜூன் 4வரை சூழல் விழிப்புணர்வு வாரம்)

# ஈராக் தொடர்பான விடயத்தில் ஈரானுக்கு அமெ. எச்சரிக்கை!



ரம்ஸ்பீல்ட்


வாஷிங்ரன்,மே29

போருக்குப் பின்னர் ஈராக்கில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளில் தேவையற்ற விதத்தில் தலையிடவேண்டாம் என்று அமெரிக்க அதிகாரிகள் ஈரானுக்கு புதிய எச்சரிக்கையை விடுத்துள்ளனர். இந்த விடயத்தில் ஈரானுக்கு அதிக அழுத்தங்களைக் கொடுப்பதற்கும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஒஸாமா பின்லேடனின் தீவிரவாத அமைப்பான அல்கெய்டா உறுப்பினர்கள் சிலரைத் தான் கைது செய்துள்ளதாக ஈரான் அறிவித்துள்ள நிலையில் அமெரிக்காவின் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தனது அண்டை நாடான ஈராக்கில் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுதத வேண்டும் என்ற விதத்தில் தெஹ்ரான் செயற்படக்கூடாது என்று மிக உறுதியான குரலில் ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்தார் அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட். வெளிநாட்டு உறவுகளுக்கான ஆணைக்குழுவில் அவர் இதனைத் தெரிவித்தார். "இன்றைய நிலையில் ஈராக் விடயத்தில் ஈரான் உதவி செய்யவில்லை" - என்றும் அவர் சொன்னார்.

கடந்த மார்ச் மாதம் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்கு முன்னர், ஈராக் தன்வசம் இருந்த பேரழிவு தரும் ஆயுதங்கள் அனைத்தையும் அழித்திருக்கலாம் என்றும் அவர் சொன்னார். போரில் ஈராக் ஏன் பேரழிவு ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை என்பது தொடர்பாகவே அவர் இப்படிக் கூறினார்.



ஆயுத்துல்லா ஹொமேனி

அதேசமயம் - தெஹ்ரானின் பின்புலத்துடன் அல்கெய்டா அமைப்பு அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதற்கு முயன்று வருகின்றது என்றும் அவர் சொன்னார்.

ஆனால், இவையெல்லாம் அமெரிக்காவின் அதீத கற்பனை என்று கூறி தெஹ்ரான் அவற்றை மறுத்துள்ளது. (ம)

# சதாம் ஆதரவுப்படை தாக்குதலில் ஈராக்கில் 2 அமெ. படையினர் பலி!

பக்தாத்,மே29

ஈராக்கின் வடபகுதி நகரான புலூஜாவில் சதாம் ஆதரவுப் படையினர் நடத்திய தாக்குதலில் இரு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர். மேலும் 9பேர் காயமடைந்தனர். செவ்வாயன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் முன்னாள் தலைவர் சதாமைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தேடுதலின் போது தாம் சதாமின் பாத் கட்சியைச் சேர்ந்த இரு அதிகாரிகளைக் கைது செய்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், அவர்கள் இருவரும் அமெரிக்கா தேடிவருவோர் பட்டியலில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

செவ்வாயன்று நடந்த சம்பவத்தின் போது அந்த நகரில் இருந்த பள்ளிவாசல் ஒன்றில் இருந்து தமது படையினரை நோக்கி சிலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அமெரிக்க அறிக்கை தெரிவித்தது. படையினர் திருப்பிச் சுட்டதில் இரு சதாம் ஆதரவுப் படையினர் உயிரிழந்ததாகவும் மேலும் 6 பேரைக் கைது செயதுள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவித்தது.

ஆனால், துப்பாக்கி மோதல் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் பள்ளிவாசல் இருந்ததாகவும் அதில் இருந்து யாரும் தாக்குதல் நடத்தவில்லை என்றும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த வாரத்தில் அமெரிக்கப் படையினர் மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும். கடந்த திங்களன்றும் சதாம் ஆதரவுப் படையினரின் தாக்குதலில் இரு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

# தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் பெருவில் அவசரநிலை பிரகடனம்!



தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

லீமா,மே29

பெருவில் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளதை அடுத்து அங்கு அதிகாரிகள் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

தொழிலாளர்களின் நெருக்குதல்களைச் சமாளிப்பதற்காகவே நாட்டில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த வேலைநிறுத்தப் போராட்டம் பெருவில் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும், வன்செயல் என்று அதிபர் அலிஜென்ரோ டொலிடோ அறிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் இதனைத் தெரிவித்தார். நிலைமையைக் கட்டுக்குள் வைத்திருக்க பெருவியன் இராணுவம், பொலீஸாருடன் இணைந்து பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

சுகாதாரத்துறை ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளூர் அதிகாரிகள் ஆகியோரும் தொழிலாளர்களின் போராட்டத்துக்குப் பெருமளவில் ஆதரவு அளித்து வருகின்றனர். வரிகளைக் குறைத்து, தமது சம்பளத்தை உயர்த்தித் தருமாறு தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆத்திரமடைந்த தொழிலாளர்களால் வீதிகள் தடைசெய்யப்பட்டுள்ளன. அனேகமான வீதிகளில் டயர்கள் போடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன.

அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டதும் பொலீஸார் சந்தேகத்துக்குரிய தலைவர்களைப் பிடியாணை ஏதுவுமின்றிக் கைது செய்துவருகின்றனர்.

# ஆபிரிக்க நாடுகளுக்கு அமெரிக்கா நிதி உதவி

நியூயோர்க்,மே29

ஆபிரிக்க மற்றும் கரீபியன் நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கான அவசர உதவிகளை வழங்குவதற்கான 15 பில்லியன் டொலர் பெறுமதியான நிதி ஒப்பந்தம் ஒன்றில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் வில்லியம் புஷ் நேற்றுக் கையெழுத்திட்டுள்ளார். அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தில் இந்த கையெழுத்திடும் நிகழ்வு வைபவ ரீதியாக இடம்பெற்றது.

நவீன உலகில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் ஆபிரிக்க மற்றும் கரீபியன் நாடுகளில் மக்கள் பட்டினியால் மடியும் நிலை அதிகரித்து வருகின்றது. இதனால் அங்கு உதவிப் பணிகளில் ஈடுபட பெருமளவு நிதி உதவிகளைத் தொண்டு நிறுவனங்கள் எதிர்பார்த்து நிற்கின்றன.

தமது வாழ்வு கேள்விக்குறியான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்காக இந்த நிதி உதவியைத் தாம் வழங்குவதாக புஷ் கூறினார். வாஷிங்ரனின் இந்த முன்மாதிரியை ஐரோப்பிய நாடுகள், கனடா, ஜப்பான் ஆகியனவும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

"நாம் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் உதவிகள் இன்றி 8ஆயிரம் ஆபிரிக்கர்கள் அந்த நாடுகளில் மரணமாகின்றனர். 14ஆயிரம் பேர் தொற்றுக்களுக்கு உள்ளாகின்றனர்" - என்றார் புஷ். (ம)

## ரியாத் குண்டு வெடிப்பு தொடர்பாக ஐந்து பேர் கைது

ரியாத்,மே29

சவூதி அரேபியத் தலைநகர் ரியாதில் அண்மையில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக அதிகாரிகள் 5பேரைக் கைதுசெய்துள்ளார்கள். அவர்களுக்கு இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படு கின்றது.

"ரியாத் குண்டு வெடிப்புக்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஐவரை நாம் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்துள்ளோம். அவர்களில் ஒருவர் இந்தத் தாக்குதலுக்கான பிரதான சூத்திரதாரி என்று நாம் நம்புகின்றோம்" - என்று ரியாத் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் முஸ்லிம்களின் மதஸ்தலமான மெதீனா நகரிலேயே இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்களது கைதைத் தொடர்ந்து ரியாத் அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் அதிகரித்துள்ளனர். (ம)

## பிரிட்டிஷ் பிரதமர் குவைத்துக்கு விஜயம்

குவைத் சிற்றி,மே29

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் நேற்றுப் புதன்கிழமை குவைத்துக்கு விஜயம் செய்தார். ஈராக் போருக்குப் பின்னர் குவைத்துக்கு அவர் மேற்கொள்ளும் முதல் விஜயம் இதுவாகும்.

இந்த விஜயத்தின் ஒருபகுதியாக குவைத்தில் இருந்து ஈராக்குக்கும் பிளயர் செல்வார். ஈராக் போரில் பணியாற்றியமைக்காக அங்கு நிலைகொண்டுள்ள பிரிட்டிஷ் இராணுவத்தினருக்கு அவர் நன்றி தெரிவிப்பார்.

இரண்டு நாள் விஜயமாக குவைத் செல்லும் பிளயர், அங்குள்ள உயர் தலைவர்களைச் சந்தித்து ஈராக் புனரமைப்புக் குறித்தும் தீவிரவாதத்தை வளைகுடாப் பிராந்தியத்தில் முடிவுக்குக் கொண்டு வருவது குறித்தும ஏனைய விடயங்கள் பற்றியும் விரிவாகப் பேச்சு நடத்துவார்.

ஈராக் போரில் குவைத் வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவிப்பதும் பிரிட்டிஷ் பிரதமரின் இந்த விஜயத்தின் நோக்கமாக இருக்கும். (ம)



வீழ்ந்து நொருங்கிய ஹெலியின் பாகங்கள் சோதனையிடப்படுகின்றன

# எவரெஸ்டில் ஹெலி விபத்து!

காத்மண்டு.மே29

உலகின் மிக உயர்ந்த மலை உச்சியான எவரெஸ்டில் முதலாவது நபர் ஏறி சாதனைபுரிந்த 50.ஆவது ஆண்டை நினைவுகூரும் வைபவம் தொடர்பான பணிகளில் ஈடுபட்டிருந்த ஹெலி ஒன்று விபத்துக்குள்ளானதில் குறைந்தது மூவர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

உலக அரங்கில்

விழாவுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த மலைத்தளம் ஒன்றில் தரையிறங்க முயன்ற வேளை அந்த ஹெலி விபத்துக்குள்ளானதாகத் தெரிவித்தது.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இருந்து மலையேற்றக் குழுவினரை ஏற்றிச் சென்ற ஹெலியே விபத்துக்குள்ளானது. கடும் பனிப் பொழிவும் புகார் மூட்டமுமே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. கடும் புகார் மூட்டத்துக்கு மத்தியில் ஹெலி தரையிறங்க செய்யும் முயற்சியை (விபத்துக்கு முன்) தொலைக் காட்சிப் படங்கள் காண்பித்தன.

தரையிறங்குகையில் உயர்ந்த கல் ஒன்றுடன் மோதி ஹெலி விபத்துக்குள்ளானதாக சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார்.

எவரெஸ்டில் முதன்முதலில் ஏறி சாதனை படைத்த பொன்விழாக் கொண்டாட்டங்களை மலையிலேயே நடத்துவதற்கான ஏற்பாடுகள் கடும் ஆபத்துக்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. (ம)



ஒரு வாரத்துக்கு முன்னர் நடந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் நூற்றுக்கணக்கில் புதைக்கப்பட்ட இடம்.

# பலஸ்தீன, இஸ்ரேல் பிரதமர்கள் புஷ்ஷுடன் விரைவில் சந்திப்பு



அபாஸ் ஷெரோன் புஷ்

ஜெருசலேம்,மே29

மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் வில்லியம் புஷ் விரைவில் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனையும் பலஸ்தீனப் பிரதமர் அப்பாஸையும் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். ஜோர்டானில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர்கள் ஏரியல் ஷெரோனுக்கும் அப்பாஸுக்கும் இடையிலான பேச்சுக்கள் தாமதமாகும் என்று அறிவிக்கப்பட்ட தன் பின்னர் புஷ் இவர்களைச் சந்தித்துப் பேசுவது தொடர்பான அறிவிப்பு வெளியாகி உள்ளது. சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னர் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பது குறித்து இரு பிரதமர்களும் கூடிப் பேச இருந்தனர். இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்ற பின்னரே புஷ்ஷுடனான சந்திப்பு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனேகமாக ஜூன் 5ஆம் திகதி இந்தப் பேச்சுக்கள் நடைபெறலாம் என ஒரு தகவல் தெரிவித்தது.

# அல்ஜீரியாவில் மீண்டும் நிலநடுக்கம்

அல்ஜீரியாஸ்,மே29

அல்ஜீரியாவில் மீண்டும் தாக்கிய நிலநடுக்கத்தால் 9பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். மேலும் 200 பேர் காயமடைந்துள்ளனர்.

சனநெருக்கடி மிகுந்த நேரத்தில் இந்த நிலநடுக்கம் தாக்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஒருவாரத்துக்கு முன்னர் இங்கு தாக்கிய பெரும் நிலநடுக்கத்தால் 2ஆயிரத்து 200 பேர் உயிரிழந்தனர். மேலும் பல்லாயிரக் கணக்கானோர் காயமடைந்தனர்.

கடைசியாகத் தாக்கிய நிலநடுக்கம் செவ்வாயன்று இரவுச் சாப்பாட்டு நேரத்தில் தாக்கியது. பல கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. தலைநகர் அல்ஜீரியாஸ் ஆகியவற்றை அண்டிய கடற்கரையோர நகர்களும் பெருமளவில் நிலநடுக்கத்தால் தாக்கப்பட்டன.

ரிச்டர் அளவு கோலில் 5.8 புள்ளியாக இந்த நிலநடுக்கம் பதிவாகியது. கடந்த வாரம் தாக்கிய நிலநடுக்கம் 6.8 புள்ளியாகப் பதிவாகி இருந்தது. (ம)

# வலி.மேற்கில் கலைவிழா

வலிகாமம் மேற்கு, பிரதேச செயலக கலாசாரப்பேரவை சுழிபுரம், தொல்புரம், பண்ணாகம், பனிப்புலம் ஆகிய கிராம உத்தியோத்தர் பிரிவு மக்களின் ஆதரவில் நடத்தும் கலை விழா இன்றும் நாளையும் தொல்புரம வழக்கம்பரை அம்மன் ஆலய மோகன அரங்கில் பிற்பகல் 4.00 மணிக்கு உதவிப் பிரதேச செயலர் மு.சிவ ராசா தலைமையில் நடைபெறவுள்ளது. முதல்நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட உயர்நீதிமன்ற நீதிபதி கு.பொ.சி.வரதராசாவும் கலந்து கொள்வார்கள்.

(ஒ-160)


## I.E.M.S. (S.T.S.D.U.K.)

(MEMBER OF THE WORLD COMMUNICATION ASSOCIATION)

We have the pleasure to inform the opening of an English medium Pre School Enrolments Now on...

சர்வதேச ரீதியிலான ஆங்கில பாலர் பாடசாலை

ஆரம்பம் இன்றுமுதல் : (2 முதல் 5 வயது வரை)

★ உங்கள் நேரத்திற்கேற்ப குழந்தைகள் பராமரிக்கப்படுவர்.

ELOCUTION I.E.M.S. & LAMDA

Spoken / Written with Grammar வகுப்புகள் நடைபெற்று சர்வதேச ரீதியிலான சான்றிதழ்களும் விஷேட சித்திக்கு கொழும்பில் பரிசுகளும் வழங்கப்படும்.


★ ஆங்கில ★ பிரத்தியேக வகுப்புகள் / Individual Classes எல்லா வயதினருக்கும் உங்கள் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்.

இடம் :

I.E.M.S. INSTITUTE
டச் றோட், கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(18485)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 - 03 - 1935 மறைவு 29 - 05 - 2000

### அமரர் நாகேசு சோமசுந்தரம்

ஆண்டுகள் மூன்றாகி விட்டும்
ஆறவில்லை எம் துயரம்!
காயாமல் நனையாமல் காத்து வளர்த்த
எங்கள் ஐயாவே!
உம்மக்கள் எந்நாளும் உங்கள்
நினைவோடு வாழ்கின்றனர் ஐயாவே!
தங்களது மனைவியும் தவியாய்த் தவிக்கின்றார் ஐயாவே!
உங்கள் திருவுருவம் எப்போது நாம் காண்போம்
என வழிமேல் விழிவைத்து
எதிர்பார்த்து நிற்கிறோம் எம் அருமை ஐயாவே!

91/6, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(18474)

உங்களை மறவாத:
மனைவி - இலட்சுமி,
பிள்ளைகள்.

## முதலாம் வருட அஞ்சலி



தோற்றம் 26 - 09 - 1983 மறைவு 09 - 03 - 2002

### அமரர் ஞானசேகரம் அஜந்தன்

ஓராண்டும் ஓடிப்போயிற்றே அஜந்தா!
உன் உருவம் மட்டும் மறையவில்லை!
தீராத வேதனையால் நாங்கள் தினமும்
அழுது கொண்டே வாழ்கின்றோம்.
மாறாத சோகந்தான் எமக்கு வந்ததே
ஆறாத கண்ணீர்தான் மீதியாச்சு!

உங்கள் பிரிவால் வாடும்:
பெரியப்பா, பெரியம்மா,
சகோதரர்கள்: வசந்தினி (லண்டன்),
தர்சினி, காந்தருபன், துஸ்யந்தி,
சுமந்தினி, பிறேம்நாத், பிரசாத்.
மருமக்கள்: இலங்கைராசா,ஜெயபாஸ்கரன்
பேரப்பிள்ளைகள்: மதுஷின், கஸ்மினா.

82,பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(18472)

தகவல்: பொ.குணசேகரம்.

## மாத்தறை பிரதேசத்தில் வெள்ளநீர் இறைப்பு!

கொழும்பு,மே29

மாத்தறை நகரை அண்டிய தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் வடியாததால் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் வெள்ளநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

துடாவை, ஹித்தட்டிய ஆகிய பிரதேசங்களில் தேங்கியுள்ள வெள்ளத்தை இவ்வாறு நில்வள கங்கைக்கு இறைத்து வெளியேற்றும் நடவடிக்கை கடந்த திங்கள் முதல் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஐந்து பாரிய நீரிறைக்கும் இயந்திரங்கள் இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன எனவும் வெள்ள நீரை முற்றாக வெளியேற்ற பல நாள்கள் செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ஏலவிற்பனை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே29

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த மணல் ஏலவிற்பனை பிற்போடப்பட்டுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

ஏலவிற்பனை இடம்பெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ஐ-3)

## கண் பரிசோதனை

தென்மராட்சி,மே29

மீசாலைப் பகுதி மக்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் ஜுன் முதலாம் திகதி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வட இலங்கை சர்வோதய நிறுவன அமைப்பாளர் திருநாவுக்கரசுவின் நினைவாக மல்லாகம் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினால் இந்தப் பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளது.

பார்வையில் பாதிப்பு உள்ள - வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு - மூக்குக் கண்ணாடி இலவசமாக வழங்கப்படவுள்ளதாக கிராம அலுவலர் க.கந்தராசா அறிவித்துள்ளார். (ஐ-117)


ENGLISH SPOKEN AND GRAMMAR

By: BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்
31.05.2003 சனி, ஞாயிறு
வகுப்புகள்
காலை 6.30 (ப.நே.)
இடம் : கொக்குவில்
(ஞானபண்டித வித்தியாசாலை அருகில்)

(C28062)



க.பொ.த. உயர்தரம் 2003
பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருப்போரே!

இந்த ஆண்டிலேயே இணைந்து கொள்ளுங்கள்.
ஓர் ஆண்டை மிச்சப்படுத்துங்கள்.

B.Sc., B.B.M.
B.Com. + B.C.A.
பயிற்சிப் பாடநெறி தொடர்பாக
இந்தியாவின் பெங்களூர் சர்வகலாசாலையில்.
அனுசரணை:
நஷனல் பெஸ்ட் கிரேட் கொலிஜ்
National First Grade College

2003 ஜுன் மாதம் முதலாம் திகதி ஞாயிறு
கலந்தாலோசனை
முற்பகல் 10.30.
பதிவுகள் மேற்கொள்ளல்
மு.ப. 11.00 - பி.ப. 5.00.
கொழும்பு
ஹில்டன் ஹோட்டல்.

கலந்தாலோசனை தினத்திலேயே பதிவுகளை மேற்கொண்டு விசேட சலுகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விவரங்கள் மே. மாதம் 25ஆம் திகதி ஞாயிறு புதினப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது.
திரு.குணவர்த்தனா - 01-811524
திரு.குணசேகர - 038-32657
கம்பனி செகரெட்ரேறியல் சேர்விசஸ் பிறைவேற் லிமிட்டெட்
Company Secretarial Services Pvt Ltd.
285 சீ 1/1. ஸ்ரான்லி திலகரத்ன மாவத்த, நுகேகொட.
285 C 1/1. Stanley Tillakaratne Mawathe, Nugegoda.
தொலைபேசி – 01–854438

(சி-28005)



சுன்னாகம் வர்த்தக சங்கத்தின்
வருடாந்த பொதுக்கூட்டமும்
புதிய நிர்வாகத் தெரிவும் - 2003

மேற்படி நிகழ்வு எதிர்வரும் 31-05-2003 சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் (புதிய நேரம்)எமது சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளதால் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் குறித்த நேரத்திற்குத் தவறாது வருகை தருமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
சுன்னாகம்
வர்த்தக சங்கம்

(18480)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தம்பிப்பிள்ளை கந்தசாமி

தோற்றம் 26.07.1937 மறைவு 29.04.2003

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

(18482)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 - 08 - 1938 உதிர்வு 29 - 05 - 1997

### அமரர் துரைச்சாமி சச்சிதானந்தம்

வருடம் ஆறு ஆனால் என்ன
எங்கள் நெஞ்சம் இருக்கும் வரை
உங்கள் நினைவுகள் இருக்கும்!

89, கிருஷ்ணபிள்ளை லேன்,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(18500)

-குடும்பத்தினர்.

## நெஞ்சத்தை விட்டகலாத 6ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் அரவணைப்பில் 22 - 12 - 1975
அநியாய அழிப்பில் 21 - 05 - 1997

### செல்வி சைமினி தர்மலிங்கம்

திதி: 29-05-2003

சைமினி,

எம்முடன் நீ இருந்த காலங்கள்
ஒளிரும் காலமாகவே இருந்தன.
ஆயிரம் விண்மீன்களால்
அலங்கரிக்கப்பட்ட வீட்டில்
ஜொலித்த உன் சிரிப்பொலி
இப்போது இல்லை.

ஒரு செப்புக் குண்டு
உன் கனவுகளையும்,
வாழ்தல் பற்றியதான அவாவுதல்களையும்
அழித்துச் சென்றது - அதுவே
எமது மகிழ்தல்களையும், சிரிப்பொலிகளையும்
களவாடியும் சென்றது.

ஆறு ஆண்டுகள் ஆனபோதும்
நீ விட்டுப்போன இந்த இடைவெளி
இன்னமும் நிரப்பப்படாமலே இருக்கிறது.
காலம் நகர்கிறது,
இன்னமும் வலிகளை எமக்குள் அதிகரித்தபடி
நாம் இருக்கிறோம்.
புதிய உறவு உன்னை பிரதிபலிக்காதா?
என ஏக்கத்தோடு.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(18506)

- குடும்பத்தினர்.

# உதயன்

## புலிகளைத் திருப்திப்படுத்துமா புதிய யோசனைகள்?

வடக்கு - கிழக்குக்கு அதிக அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தேவை என்ற புலிகளின் கோரிக்கை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதில் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பதில் குறித்து விரிவாக ஆராய்ந்து, தாம் ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு இரண்டொரு நாள்கள் தேவை என்று புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்.

நிதி, நிர்வாக அதிகாரங்களுடன் சட்ட அந்தஸ்து மிக்க இடைக்கால நிர்வாகத்தைத்தான் புலிகள் கோரியிருந்தனர்.

தான் ஆட்சிக்கு வந்தால் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வடக்கு - கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்குக் கையளிப்பதாகத்தான் ரணில் விக்கிரமசிங்க கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னர் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் மக்களுக்கு வழங்கியிருந்த வாக்குறுதியில் தெரிவித்திருந்தார்.

ஆனால், தென்னிலங்கை மக்களுக்கு - குறிப்பாகச் சிங்களப் பேரினவாதிகளுக்கு - இடைக்கால நிர்வாகம் என்ற சொல் வேம்பாய்க் கசக்கின்றதாம்; அவர்களுக்கு அச்சொல்லின் மீது 'அலர்ஜி'யாம்.

அதனால், இடைக்கால நிர்வாகத்துக்குப் பதிலாக - மாற்று யோசனையாக - உயர் நிதி, நிர்வாகக் கட்டமைப்பு (Apex Body) ஒன்றை அரசு தனது பதிலில் முன்வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. வடக்கு - கிழக்கின் அபிவிருத்தி, புனரமைப்பு நடவடிக்கைகளைக் கையாள்வதற்கான ஒரு நிர்வாகப் பொறிமுறையாக இது இருக்கும் என்றும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகள் எதையோ கேட்க, அரசு வேறு எதையோ தெரிவிக்க முயல்வதுபோலப்படுகின்றது. அரசின் பதில் புலிகளைத் திருப்தி செய்யுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால், சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்க முன்னரும், தேர்தல் காலத்திலும் தான் கொடுத்த - இடைக்கால நிர்வாகம் பற்றிய - வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரம், வலு இல்லாத - கையாலாகாத - அரசியல்வாதிகளே இந்த அரசை நடத்துகின்றார்கள் என்ற கருத்தை சர்வதேச சமூகத்துக்கு உறுதிப்படுத்த வைப்பதில் புலிகள் வெற்றியீட்டுவார்கள் போலவே தென்படுகின்றது.

இதற்கிடையில் -

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக கோரிக்கை தொடர்பாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

"முன்னர் நாம் இடைக்கால நிர்வாகத்தை கோரிய சமயங்களில், அது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சிகளைத் தடம்புரளச் செய்யும் நடவடிக்கை என்று கூறி அதற்கு முட்டுக்கட்டைபோட்டு நின்ற கூட்டணியினர், இப்போது இடைக்கால நிர்வாகம் கோரும் புலிகளுக்கு வக்காளத்து வாங்குகின்றனரே!" - என்று கவலைப்படுகின்றார் அவர்.

குத்துக்கரண - குறுக்கு - வழிகளில் அதிக நாடாளுமன்றக் கதிரைகளை கபளீகரம் செய்து வைத்துக்கொண்டு, தமிழரின் இனப்பிரச்சினையை மும்முர அரசியல் வியாபாரமாக மேற்கொண்ட சமயங்களில், இடைக்கால நிர்வாகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சுவையாக இனித்தது. ஏனெனில், இடைக்கால நிர்வாகம் பற்றிய தீர்மானத்தை எடுக்கப்போகும் ஆட்சியாளர்களும் தனது அணியைச் சேர்ந்தவர்கள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் கணிசமானோரும் தனது அணியைச் சேர்ந்தவர்கள் என்ற நிலைமை இருந்ததால்.

இப்போது வடக்கு - கிழக்கு தமிழர்களின் அதிகாரபூர்வ - ஏக - பிரதிநிதிகள் புலிகளே என்பது பல வழிகளிலும் நிரூபிக்கப்பட்டு, ஏற்கப்பட்டு, அதன் அடிப்படையில் இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசப்படும்போது அது அவருக்கு வேம்பாய் கசக்கின்றது.

"இடைக்கால நிர்வாகம் குறித்து அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் - உடன்பாடு - எதுவும் இல்லை. அடிப்படை அரசியல் விடயங்கள் இன்னும் பேசப்படவேயில்லை. இந்நிலையில், இடைக்காலம் என்பது எது என்று எவ்வாறு வரையறை செய்யமுடியும்?" எனவும் அவர் கேள்வி எழுப்புகின்றார்.

புலிகளுக்கும், ரணிலுக்கும் இடையில் கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பே சமாதானப் பேச்சுக்கான இணக்கம் இருந்தது என்பதும் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது என்ற அடிப்படை உறுதிமொழியுடன்தான் இருதரப்பு புரிந்துணர்வு, தேர்தலுக்கு முன்பிருந்தே கட்டி வளர்க்கப்பட்டது என்பதும் டக்ளஸுக்கு தெரியாமல் இருக்கலாம். எனவே, அவரது கருத்தைப் புறக்கணித்து விட்டுவிடலாம்.

## போரினால் பாதிக்கப்பட்ட சிறாரின் இடைத்தங்கல் முகாமுக்கு செவ்வாயன்று அடிக்கல் நடப்பட்டது

கிளிநொச்சி,மே29

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பேணுவதற்குரிய இடைத்தங்கல் முகாமுக்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்காக கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் கடந்த செவ்வாயன்று அடிக்கல் நடப்பட்டது.

யுனிசெவ் அமைப்பின் உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

திட்டத்தின் ஒரு பகுதியாக பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரிப்பதற்கு வேண்டிய ஒரு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் தற்போது நடப்பட்டுள்ளது. யுனிசெவ் நிறுவன இலங்கைப் பிரதிநிதி சைபன், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் அடிக்கல்லை நட்டனர்.

அங்கு உரையாற்றிய யுனிசெவ் நிறுவனப் பிரதிநிதி, சிறுவர்களின் எதிர்கால நலன்களைக் கருத்திற்கொண்டு நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் வரவேற்புக்குரியது என்றார்.

வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான நலனோம்புத் திட்டங்களை முன்னெடுக்க விடுதலைப் புலிகள் மிகவும் ஆர்வமாகவும் ஆணித்தரமாகவும் உள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது. அவர்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## நாட்டு நடப்பு

### கண்டனன் அரிய காட்சி

ஆங்கில அணங்கு ஒருத்தி
அழகுசேர் வண்ணப் பாவை
குங்குமத் திலகம் சூடி
கூட்டியே தலையைப் பின்னி
மங்கள மஞ்சள் பூசி
மலர் கொண்டுமாலை சூடி
பங்கமில் வண்ணச் சேலை
பாங்குடன் வரிந்து கட்டி
அங்கது அவிழா வண்ணம்
அரையிலோர் வாரும் கட்டி
நங்கையவள் நாணம் மேவ
நடந்திட மகிழ்ச்சி உற்றேன்
எங்கம்மா செல்கின்றாய்? என
எழில் பெறுதமிழ் விழாவை
மங்கள விளக்கை ஏற்றி
முறைப்படி தொடக்க என்றாள்
எங்கள் தமிழ் பண்பு இன்னும்
இருக்குது இறக்கவில்லை என்பேன்.

- விகடகவி.

# மீனவர் நெருக்கடிகளைத் தீர்க்க நடவடிக்கைகள் தொடர்கின்றன

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே29

யாழ்.குடாநாட்டு மீனவர்கள் தொழில் செய்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் கெடுபிடிகளை நீக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கடற்பிரிவுத் தலைவர் போல் எரிக் யுயேக் தெரிவித்துள்ளார்.

தன்னைச் சந்தித்துப் பேசிய வடமாகாண கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நிர்வாகிகளிடமே அவர் இப்படிக் கூறினார். யாழ். கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் திங்களன்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பில் பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டன. சமாசப் பிரதிநிதிகளால் அங்கு வலியுறுத்தப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ தற்போதைய சமாதானச் சூழ்நிலையிலும் யாழ்.குடாநாட்டிலுள்ள கடற்றொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். அதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் பக்கச்சார்பற்ற முறையில் செயற்படுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் கடற்படையினரின் படகுகளில் பயணிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

★ குருநகர் இறங்குதுறைப் பகுதியில் மீனவர்களின் நன்மை கருதி தேநீர்ச்சாலை ஒன்றை அமைப்பதற்கு படையினரிடம் இருந்து அனுமதி பெற்றுத்தரவேண்டும்.

★ இந்திய மீனவர்கள் குடாநாட்டுக் கடற்பிரதேசங்களில் இழுவைப் படகுகளில் வந்து தொழிலில் ஈடுபட்டு வருவதால் எமது கடல் வளம் அழிவடையும் நிலையில் உள்ளது. இதனைத் தவிர்க்கும் வகையில் அவர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். (ம-5)

## புலிகளின் கோரிக்கையை நிறைவேற்ற அஷ்ரப் காங்கிரஸ் பிரதமரைக் கோரும்

புலிகளை மீண்டும் பேச்சுகளில் ஈடுபடச் செய்யும் வகையில் அரசாங்கம் அவர்களது கோரிக்கைகளைப் பரிசீலித்து நிறைவேற்ற வேண்டுமென அஷ்ரப் காங்கிரஸ் எம்.பிக்கள் இவ்வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கேட்கவுள்ளனர்.

பிரதமருடனான சந்திப்பின்போது முஸ்லிம்களின் தனித்தரப்பாக சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்ளவேண்டும் என்பதையும் அஷ்ரப் காங்கிரஸ் எம்.பிக்கள் வலியுறுத்துவர்.

கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்படுமிடத்து வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கத் தேவையில்லையென்பதையும் அஷ்ரப் காங்கிரஸ் பிரதமரிடம் விளக்கும் என்று காங்கிரஸின் தலைவர் எஸ்.சுபைர்தீன் தெரிவித்தார்.

## சுற்றாடல் தினத்தையொட்டி விசேட செயற்றிட்டங்கள்

வலிகாமம்தெற்கு,மே29

சுற்றாடல் மாசடைவதைத் தடுப்பதற்கும், மக்களிடையே சுகாதாரம் தொடர்பான நன்மைகளை விளக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் குடாநாடு தழுவிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எதிர்வரும் ஜூன்மாதம் முதலாம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதிவரை உலக சுற்றாடல் தினத்தையொட்டி இப்பணிகள் இடம்பெறவுள்ளன.

யாழ்.குடாநாட்டு பிரதேச செயலகங்கள் மூலம் இவற்றை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உலக சுற்றாடல் தினக்காலங்களில் சுற்றாடல் எவ்வாறு மாசடைகின்றது, மாசடையாமல் தடுக்க மேற்கொள்ளக் கூடிய தடுப்பு நடவடிக்கைகள், சூழல் மாசடைவதனால் நிலத்திற்கு கீழ் உள்ள நீர் எவ்வாறு பாதிப்படைகின்றது போன்றவற்றை விளக்கக் கூடிய கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இக்காலங்களில் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், கல்விக் கூடங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் யாவும், சூழல் மாசடைதலை விளக்கும் பதாகைகளை அமைக்கும்படியும் -

கொடிதினம் அனுஷ்டிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் மரம் நடுகை மற்றும் சிரமதானம் ஆகியவையும் நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. (ஒ-152)

### நாளை

வைகாசி 16
வெள்ளிக்கிழமை
30.05.2003
திதி : சதுர்த்தசி
காலை 6.23 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
முன்னிரவு 11.31 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம் : 5.52- 7.22
ராகுகாலம் : 10.22-11.52
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தோல்விக்குப் பயந்து சும்மா இருப்பதைவிட எதனையும் முயற்சித்துப் பார்ப்பது மேல்.

## தரவை படை முகாம் அழிப்பின் 8 ஆம் ஆண்டு நிறைவு விழா

### மட்டக்களப்பில் இடம்பெற்றது

கிளிநொச்சி,மே29

மட்டக்களப்பு மாவட்டத்தின் தரவை இராணுவ முகாம் தாக்கி அழிக்கப்பட்டதன் எட்டாம் ஆண்டு நிறைவு நாள் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது.

தரவை மைதானத்தில் நேற்றுமுன்தினம் காலை நிறைவு நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக் கொடியை மூத்த தளபதி கேணல் கருணா ஏற்றி வைத்தார். வினோதன் படையணிக் கொடியினை தளபதி ஜிம்கெலியும் மகளிர் படையணிக் கொடியினை தளபதி தீந்தமிழும் ஏற்றி வைத்தனர்.

சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலில் வைக்கப்பட்டிருந்த மாவீரர் லெப்டினன்ட் கேணல் வினோதனின் திருவுருவப் படத்தினை மட்டக்களப்பு, அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தரவை முகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த ஏனைய 17 மாவீரர்களது திருவுருவப் படங்களை மட்டக்களப்பு, அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் றெஜினோல்ட் ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

இந்த நிறைவு நாளையொட்டி கிரிக்கெட், உதைபந்தாட்டம் முதலான போட்டிகளும் நடத்தப்பட்டன. (ஒ)

## மிதிவெடிகள் அகற்றப்படாததால் சமூகப் பொருளாதாரத்தில் முடக்கம்

### மாவட்ட பிரதம அலுவலர் தெரிவிப்பு

மிதிவெடிகள் அடையாளம் காணப்பட்டு அகற்றப்படாததால் வளமான பிரதேசங்களும், குடியிருப்புப் பகுதிகளும் சமூக பொருளாதாரத்தில் முடக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு தெரிவித்தார் யாழ்மாவட்ட மிதிவெடி அகற்றும் செயலக பிரதம உத்தியோகத்தர் எல்மோ ஆனந்தராஜா.

குடாநாட்டில் 90 சத வீதமான கண்ணி வெடிகள் இராணுவனத்தினராலும், 10 சதவீதமானவை விடுதலைப் புலிகளாலும் புதைக்கப்பட்டவை எனக் கணக்கிடப்பட்டுள்ளன.

இவற்றை அகற்றுவதற்கு 'ஹலோ டிரஸ்ற்' நிறுவனத்தைச் சேர்ந்த வெளிநாட்டு நிபுணர்கள் மூவரும் உள்நாட்டுப் பணியாளர்கள் சுமார் நூறுபேரும் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் அமெரிக்காவின் 'றொங்கோ' நிறுவனத்தினரின் 4 மோப்ப நாய்களும் இரு நிபுணர்களும் 20 பணியாளர்களும் கூட மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் இலங்கை இராணுவத்தின் மிதிவெடி அகற்றும் பிரிவினரும் இணைந்து செயற்படுகின்றனர்.

'றொங்கோ' நிறுவனத்தினர் சரசாலை, சாவகச்சேரி வடக்கு பகுதிகளிலும் 'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவனத்தினர் இருபாலை, கலட்டி, கோப்பாய், அரியாலை ஆகிய பகுதிகளிலும் மிதிவெடிகளை அகற்றி வருகின்றனர் - இவ்வாறு எல்மோ ஆனந்தராஜா மேலும் தெரிவித்தார். (ஒ-ரி)

# பஜாஜ் இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து ஒரு **பஜாஜ்** மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. நீங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்கு கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய **பஜாஜ்** மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு. நீங்கள் நாடுவது வேகமா? சிக்கனமா? அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? அது எது வேண்டுமானாலும் **பஜாஜ்** வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். மற்றும் DPMC யின் நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் சேவை, பராமரிப்பு மற்றும் உதிரிப்பாக வியாபார வலையமைப்பினூடாகவும், பிராந்திய அலுவலகங்களுடாகவும் தன்னிகரற்ற வேகமான வாடிக்கையாளர் சேவையையும் DPMC ஒன்றுதிரட்டிய வளங்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இவை அனைத்தினாலேயே

**பஜாஜ்** இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிளாக திகழ்கின்றது.

ஒவ்வொரு மோட்டார் சைக்கிளுடனும் ஜக்கட் ஒன்று இலவசம்.

மேற்படி விலைகள் பெ.சே.வரி புற நீங்கலானவை.
மற்றும் விலைகள் முன் அறிவித்தலின்றி மாற்றத்திற்குரியவை.

தன்னிகரற்ற உத்தரவாதம்



pulsar

* 143.43 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
* பாதுகாப்பான டிஸ்க் பிரேக் சகிதம்.
* 5 கியர்கள் கொண்ட வேக ஒழுங்கு.

விலை ரூபா 107,835/-



Caliber croma

* 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
* நியம சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.
* பாதுகாப்பான டிஸ்க் பிரேக் சகிதம்.

விலை ரூபா 96,930/-



Caliber

* 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
* நியம சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.
* கைப்பிடியை பூட்டுவதற்கும், ஸ்டார்ட் செய்வதற்கும் ஒரே பூட்டு

விலை ரூபா 82,355/-



BOXER CT Deluxe

* 99.36 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
* சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
* இப்போது K-Tec தொழில்நுட்பவியல் சகிதம்.

விலை ரூபா 71,526/-



BOXER CT

* 99.36 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
* சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
* பின்புற ஆசனத்தை அகற்றி லகேஜ் கரியராக பயன்படுத்தலாம்.

விலை ரூபா 68,568/-



BOXER AT

* 99.36 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
* சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
* சக்திவாய்ந்த டபல் கிரேடில் செசிஸ் பொருத்தப்பட்டது.

விலை ரூபா 64,200/-



Legend

* 145.45 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
* சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 66 கி.மீ.

விலை ரூபா 83,811/-



bajaj BYK

* 92 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
* சாதாரண சோதனை நிலைமைகளில் 100kmpl வேகம்.
* ரோட்டைமிக் மொடல்.
* 10 ஸ்போக்ஸ்கல், ஒக்ஸிபிரேஷன் பிரதிபலிப்பு முறைமைக்கு.

விலை ரூபா 59,[illegible]/-

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600
பெக்ஸ் : 074-700677, 687175. ஹொட்லைன் : 074-715050

அதிகாரம் பெற்ற விற்பனையாளர் : குறிஞ்சி டிரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 0777-979279, 0777-155730

குறிஞ்சி டிரேடர், 8, நவீன சந்தை, சாவகச்சேரி.
தொ.பே : 0777-979279, 0777-155730

# ஓர் அரங்க ஆய்வு

# சிறைக்குள் வாடும்..... .....சில உள்ளங்கள்


யாழ்.சிறைச்சாலையின் முகப்பு

குடாநாட்டில் குற்றச் செயல்கள் பற்றி அதிகம் பேசப்படுகின்றதே தவிர குற்றமிழைப்பவர்கள் யார், அவர்களின் பின்னணி என்ன, என்பதை யாரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் கைதிகளின் மறுபக்கத்தை ஆய்வுசெய்ய முயன்றிருக்கின்றனர்.

உளவியல் மற்றும் நுண்கலைப் பிரிவுகளைச் சேர்ந்த ப.கேதீஸ், க.தர்மசேகரம், சி.ஐங்கரன் ஆகிய மூவரும் கூட்டாக யாழ்.சிறைச்சாலைக்குள் சென்று அரங்க செயற்றிட்ட அடிப்படையில் நடத்திய ஆய்வின் பெறுபேறுகள் இங்கு கட்டுரை வடிவில் வெளியாகின்றன.

ப.கேதீஸ், க.தர்மசேகரம், சி.ஐங்கரன்
யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள்.

(நேற்றைய தொடர்ச்சி)

ஒருவனுடைய நடத்தையைத் தீர்மானிப்பதில் நண்பர்களின் பங்கு காத்திரமானது. இதனை மனதில் கொண்டே "உன்நண்பர்களை யார் என்று சொல், நான் உன்னைப்பற்றி சொல்கிறேன்" என்பது ஓர் அறிஞர் கூற்று. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களிலும் சகபாடிகளின் செல்வாக்கை அதிகமாகக் காணமுடிந்தது. நண்பர்களோடு இணைந்து களவுகளில் ஈடுபடல், குழு மோதல்கள், தீவிர மதுப் பழக்கம், கடத்தல்கள் போன்றவற்றில் அவர்கள் ஈடுபடுவதற்கு அவர்களோடு கூடித் திரிந்தவர்களின் செல்வாக்கு பெரும் உந்து சக்தியாய் இருந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற துணிகரத்திருட்டுக்கள் பலவற்றில் சம்பந்தப்பட்டதாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர் எம்மோடு கதைத்தபோது "பெடியனோட சேர்ந்த உசாரில் எல்லாரும் சேர்ந்து செய்தம்"

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், ஒரு வழக்கைச் சம்பந்தப்படுத்தி ஒரு நண்பர்கள் கூட்டமே சிறைக்கு வந்திருக்கிறது. இளைஞர் சமூகத்தினது சிந்தனைகள் ஆரோக்கியமாக அமைவதற்கு இளைஞர் அமைப்புகளும் தன்னார்வ நிறுவனங்களும் செய்யவேண்டிய பணிகள் நிறையவே உண்டு. அதற்கான வேலைத்திட்டங்களை விரைந்து முன்னெடுப்பது நலம் தரும். சமூகத்தைக் கட்டியெழுப்ப உதவும்.

### சட்டம் பற்றிய விளக்கமின்மை

யாழ்ப்பாணத்தில் சட்டவரையறைக்குள்ளான குற்றச் செயல்களின் அதிகரிப்புக்கு மக்கள் மத்தியில் காணப்படுகின்ற சட்டம் பற்றிய போதிய தெளிவின்மையும் காரணியாகின்றது. உதாரணமாக 18 வயதிற்கு உட்பட்ட ஒரு பெண் ஒருவனைத் திருமணம் முடிக்க விரும்பி இருவரும் இணைந்திருந்தபோது உறவினர் கொடுத்த தகவலின் பேரில் இருவரும் கைதாக்கப்பட்டனர். இது பற்றி அந்த ஆணுடன் கதைத்தபோது, "18 வயதிற்குக் குறைவான பிள்ளையைக் கூட்டிக் கொண்டதால் அது பிழையென்று எனக்குத்தெரியாது. ஆனால், பிள்ளையும் விரும்பித்தான் வந்தது..." என்று கூறினார். மேலும் சிறையிலிருந்து தப்பியோடி மீண்டும் கைதாக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒருவருக்கு அதிக பட்சமாக மூன்று வருட சிறைத் தண்டனை கிடைக்கும் என்பது தெரியாமலே பலர் அத்தவறைச் செய்திருக்கின்றனர்.

இப்படியான பல குற்ற நடத்தைகள் சட்டம் பற்றிய போதிய விழிப்புணர்வின்மையால் இழைக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலைமைகளில் மாற்றம் வேண்டுமாயின்,

1. "சட்டம் பற்றிய கற்கை" பாடசாலை மட்டங்களில் பரவலாக்கப்படல் வேண்டும்.

2. சட்டம் பற்றிய கருத்துக்களை உரிய கவனப்படுத்தி ஊடகங்கள் வெளியிடுதலும் நன்மை தரும்.

3. சமூக நலன்நோக்கில் செயற்படுகின்ற நிறுவனங்களில் பணியாற்றுவோர் மத்தியிலும் சட்டவியல் கருத்துக்கள் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.

### சட்ட நடைமுறையாளர்களின் அசிரத்தை

கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பொலீஸாரும், மதுவரித் திணைக்கள உத்தியோகஸ்தர்களும் லஞ்சத்தைப் பெற்றுக்கொண்டு திருப்திப்பட்டுக் கொள்வதால் கசிப்பு ஒழிப்புச் சாத்தியமின்றிப் போனதுடன், பெரிய அளவில் உற்பத்தி இடம் பெறவும் வழிசெய்தது. இதேபோன்று பல குற்ற நடத்தைக்கு சட்ட நடைமுறையாளர்களே உடந்தையாகும் அவலநிலை இங்குண்டு.

மேலும், சில சட்டவாதிகளிடமும் நீதியாளர்களிடமும் இருக்கின்ற மெத்தனப்போக்கு விளக்க மறியலில் இருக்கின்ற பலரை அதிக மன உளைச்சலுக்கு உள்ளாக்கி விடுவதுடன் நடத்தை சார்ந்த வன்போக்கு மனோபாவத்தை அவர்களில் ஏற்படுத்துகிறது. உதாரணமாக விளக்க மறியலில் கைதியொருவர் கருத்துக் கூறுகின்றபோது, ஒவ்வொரு தடவையும் தம்மை விளக்கமறியலில் வைக்குமாறு தீர்ப்பிடும் நீதிபதியை "....கொலை செய்யவேணும் மாதிரிக் கிடக்கு..." என்றார். இது ஓர் ஆபத்து மிகுந்த மனோபாவமாகும். இவ்வாறானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கின்ற வகையில் சட்ட உதவிகளும் சீரிய ஆலோசனைகளும் வழங்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமையாகும்.

### தவறுக்குத் துணை போகும் அரச, அரசியல் தலைமைகள்

குறுகிய நோக்கத்தோடு இளைஞர்களை குற்றச் செயலுக்குத் தூண்டுகின்ற அரச, அரசியல் தலைமைகளாலும் யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன. இந்தப் பின்னணியில் கைதுசெய்யப்பட்ட பலர் யாழ்.சிறைச்சாலையில் உள்ளனர். உதாரணமாகப் பத்திரிகையாளர் கொலை, தேர்தல் கால வன்முறை...

அரசு போதிய தொழில் வாய்ப்புக்களைக் கொடுக்காததன் விளைவாக வருமானமின்மை, வறுமை என்பன ஏற்பட்டு அவர்களைக் குற்ற நடத்தைக்குத் தூண்டுகிறது.

விடுதலைப் போராட்டத்தின் பொருட்டு பல இயக்கங்களில் இணைந்து பயிற்சி பெற்ற இளைஞர்களில் சிலர் இடையில் தம்மை மாற்றிக் கொண்டு தாம் பெற்ற பயிற்சிகளைப் பயன்படுத்தி பல குற்றச் செயல்களில் ஈடுபட்டனர். இதனால் கணிசமான அளவு குற்றச் செயல்கள் இடம்பெறலாயின. எப்படி உங்களால் இவ்வாறெல்லாம் செய்ய முடிந்ததெனக் கேட்டபோது, எமக்குக் கிடைத்த பயிற்சியும் தற்துணிவும் துணைநின்றன எனக் கூறினார். இயக்கங்களில் இருந்து உதிரிகளாகியோருக்கு ஏற்ற முறையிலான புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகமிக அவசியமானது.

இவ்வாறு பல காரணங்களினாலும் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அடிப்படை வசதிகளேயின்றி அவதிப்படுகின்றனர். இதற்கு சிறைச்சாலை நிர்வாகத்தினரைக் குறை சொல்லுவதற்கில்லை. சிறைச்சாலைக்குப் பொறுப்பான உள்துறையமைச்சு உரிய ஒதுக்கீடுகளை யாழ்.சிறைச்சாலைக்கு வழங்காதிருப்பதே இதற்குக் காரணமாகும்.

### கண்டுகொள்ளப்படவேண்டிய சிறைச்சாலை மனிதர்கள்

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பலர் தம் எதிர்கால வாழ்வு பற்றி அச்சம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். ஒருமுறை சிறைக்கு வந்து மீண்டும் சமூகத்திற்குச் செல்லுகின்றபோது தம்மைத் தொடர்ந்தும் குற்றவாளிகளாகவே பொதுமக்கள் அடையாளப்படுத்துவர் எனவும், தாம் வாழும் சூழலில் வேறு குற்றச்செயல்கள் இடம்பெற்றாலும் தம்மையே சந்தேகங் கொள்வர் என்றும் அச்சத்தை வெளியிட்டனர். பொதுவில் ஒரு முறை குற்ற நடத்தையில் ஈடுபட்டதாகக் கருதப்பட்டவர் தொடர்ந்து குற்றச்செயல்களில் ஈடுபடுவார் என ஊகித்து அவரைக் குற்றவாளியாக முத்திரை குத்துதல் பொருத்தமானதல்ல. அத்துடன் தாம் சமூக அந்தஸ்து இழந்தவர்கள் என அவர்கள் உணருவதாலும் குற்ற நடத்தைகளில் தொடர்ந்து ஈடுபட சமூகம் காலாகிறது. "ஊரில் கள்ளப்பட்டந்தானே எனக்கு பெரிய களவா எடுத்துப்போட்டு சிறைக்கு வந்தன்....." என ஒருவர் எம்மிடம் கூறினார். இவரின் இந்த நிலைக்கு சமூகமே ஒரு வகையில் பொறுப் பேற்கவேண்டும். எனவே, இத்தகைய சமூகப் போக்குகள் மாற்றம் காணவேண்டும்.

பிறிதொரு விசித்திரமான நிலையும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது. சட்டவிரோதமாகத் தொழில் பார்த்துப் பிழைப்பு நடத்துபவர்கள் தாம் செய்த குற்றத்துக்காக இன்னொருவரின் வறுமையைச் சாதகமாக்கிக் கொண்டு அவனையே சிறைக்கு அனுப்புகின்றனர். பிரதிபலனாக அந்த வறியவனின் குடும்பத்துக்கான செலவீனத்தை தாம் பொறுப்பேற்பதாகவும் உறுதிவேறு வழங்குகின்றனர். இந்தக் காரணத்தினால் குற்றவாளிப் பாத்திரமேற்று சிறைக்குப் பலர் வருகின்றனர்.

இந்த இழிநிலை கண்டு களையப்பட்டு குற்றம் இழைத்தவர்களையே இனங்காணுகின்ற நிலைமைவேண்டும்.

சில சமயங்களில் ஒரு வழக்கில் சந்தேகிக்கப்படும் நபர் மீது மேலும் பல வழக்குகள் சோடிக்கின்ற பொலீஸார் அவனது வாழ்க்கையைச் சிக்கலுக்குள் உள்ளாவதாகத் தெரிய வருகின்றது. இதற்கு யாழ்.சிறைக் கைதிகளும் விதிவிலக்கல்ல. இவ்விடயத்துக்கு உரியவர்களே பதிலளிக்க வேண்டும்.

சிறையில் உள்ளவர்களின் ஆத்மீக ஆற்றுப்படுத்தலுக்காக நேரம் ஒதுக்கப்படுவதுண்டு. இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கத்தோலிக்க மதகுரு ஒருவர் மட்டுமே யாழ்.சிறைச்சாலையில் சேவை செய்துவருகிறார். இது விடயத்தில் இந்துசமய நிறுவனங்களோ, இந்துக் குருமார்களோ பாராமுகமாக இருப்பது வேதனைக்குரியதே. இவர்கள் மாநாடுகளுக்கு வழங்கும் முக்கியத்துவத்தில் ஒரு வீதத்தையேனும் இத்தகைய மனிதர்களுக்காக வழங்குவது கண்டிப்பானது.

குடும்பத்தில் இருந்து பிரிந்து சிறையில் வாடும் ஒருவரை நிரந்தரமாகவே குடும்பத்தினர் கைவிட்டுவிடும் நிலையும் காணப்படுகின்றது. இதைவிடுத்து அவர்களை குடும்ப அங்கத்தவர்களாகவே கணித்து நடத்துகின்ற நிலை குடும்ப மட்டங்களில் ஏற்படவேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டவர்களின் உளமேம்பாடு கருதி பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்துவது சிறைச்சாலை நடைமுறைகளில் உண்டு. அவற்றில் சிலவற்றையேனும் யாழ்.சிறைச்சாலையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது உடனடியாக மேற்கொள்ளுதல்வேண்டும். இவ்வாறான சிறைச்சாலை நிலைமைகளையும் சமூகத்திற்குப் பாரப்படுத்த விரும்புகிறோம்.

### ஆய்வில் அரங்கு

பொதுவாக எந்த ஆய்விலுமே கதைத்தல், அவதானித்தல், தரவுகளைச் சேகரித்தல் போன்ற அணுகுமுறைகளே கடைப்பிடிக்கப்பட்டு வருவதுண்டு. இந்த ஆய்வில் "அரங்கினூடு கதைத்தல்" என்ற அணுகுமுறையே முதன்மைப்படுத்தப்பட்டது. சுதந்திரமான அரங்க விளையாட்டுக்கள், அதனூடாக அவர்களைத் தயார் நிலைப்படுத்தல், அவர்களை தாம் விரும்பிய செயற்பாடுகளில் ஈடுபடவைத்தல், பாட்டுக்களைப் பாடுதல், ஆடுதல் அதிலிருந்து அவர்களை ஆற்றுகை செய்யவைத்தல் என்ற நிலைகளினூடு அவர்களை மீண்டும் மீண்டும் அணுகிக் கதைத்தபோது, "தம்மைத் தாமே கண்டு" வெளிப்படுத்தினர். அந்த வெளிப்படுத்தல்களினூடு அவர்கள் ஒவ்வொருவரினதும் வாழ்வியல் நிலைமைகளையும் அவர்களது எதிர்காலக் கனவுகளையும் தரிசித்தோம்.

சிறைச்சாலைகள் இல்லாதிருக்கும் ஒரு நாட்டில் வளம்மிக்க சமூகத்தை நாம் காணமுடியும். குற்ற நடத்தைகளைத் துடைத்தழித்து விடலாம் என்று கூறமுடியாவிடினும் அவற்றைக் கணிசமான அளவு குறைக்கலாம் என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை. ஆக்ரோஷ உணர்வுகளை நேரிய வழியில் கையாளுகின்ற நிலையை மக்கள் மத்தியில் உருவாக்குவதன் மூலம் வன்முறையற்ற ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

துரிதப்படவிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான கொள்கை வடிவமைப்புக்களில் குற்ற நடத்தை குறைப்புக்கான வழிகள் முன்மொழியப்பட்டு செயலாக்கம் பெறுதல் இன்றைய காலத்தின் கட்டாயமாகிறது.

(முற்றும்)

இக்கட்டுரையில் தரப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கீழ்வரும் முகவரிக்குத் தந்துதவுமாறு வேண்டுகிறோம்.

ப.கேதீஸ்,
மூன்றாம் வருடம், நாடகமும் அரங்கியலும்,
நுண்கலைத்துறை,கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# தமிழ் - முஸ்லிம் பிரச்சினைகளை தீர்த்துவைக்கப் புதியகுழு நியமனம்

## கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பை அடுத்து முடிவு

திருகோணமலை,மே29

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடுகளைக் களையும் நோக்குடன் எண்மர் அடங்கிய குழுவொன்றை அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.திலக்குக்கும் மூதூர் பிரதேச மஜ்லிஸ் அஷ்சூறா பிரதிநிதிகளுக்கும் இடையில் கண்காணிப்புக் குழுவின் திருமலை அலுவலகத்தில் அதன தலைவர் ஜாக்லெடான் தலைமையில் கடந்த வாரம் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இரண்டாம் கட்டமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மஜ்லிஸ் அஷ்சூறா சார்பில் எம்.எம்.கரீம், எஸ்.எம்.ஜவார்த்தீன், ஐ.எம்.எஸ்.வகார்தீன், கே.ஏ.ரகுமான், எம்.ஏ.எம்.சாகிர், எஸ்.எம்.றசீட், எஸ்.எம்.றியாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்துவைக்குமுகமாக ஒரு குழுவை அமைப்பதென முடிவு எடுக்கப்பட்டது.

இக்குழுவில் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.திலக் சார்பான நாலு உறுப்பினர்களும், மஜ்லிஸ் அஷ்சூறா அமைப்பின் சார்பில் நாலு உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர்.

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை காலமும் எந்தவித நடைகளும் இன்றி தமக்குரிய விவசாயக் காணிகளில் விவசாயம் மேற்கொண்டவர்கள் எந்தவித தயக்கமுமின்றி தத்தமது காணிகளில் விவசாயத்தை மேற்கொள்கின்றனர்.

குத்தகை சம்பந்தப்பட்டதும் பயிர்ச்செய்கை பண்ணப்பட்டதுமான காணிகள் தொடர்பாக எழும் பிரச்சனைகளை இக்குழு ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

★ கடல் வலயங்களில் மீன் பிடிக்கலாம். எனினும் குளங்கள், ஆறுகள் மற்றும் களப்புகளில் மீன் பிடித்தல் சம்பந்தமாக எழும் பிரச்சனைகளை இக்குழு ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

★ மக்கள் வழமையான தொழில், தொழில்சார் நடவடிக்கைகளை எந்தவித அச்சமுமின்றி அன்றாடம் மேற்கொள்ளலாம் என்பனவாகும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு வளவு விற்பனைக்கு

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு அண்மையில் பருத்தித்துறை வீதிக்கு மேற்காக அமைந்த 10 பரப்பு வீடுவளவு உடன் விற்பனைககுண்டு. தொடர்பு: மா.வைகுந்தவாசன், பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.(18264)

### • விற்பனைக்கு

KONICA (1212) Photo copy Machine விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கணேஷ் (T.P. 3785), கேணியடி லேன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (18495)

புதிய Washing Machine Fully Automatic LG-5Kg உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077-6023930 (18487)

### வைத்திய நூல்கள்

ஆயுர்வேத தமிழ் வைத்திய நூல்கள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. தொடர்பு: இல.234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.No. 222 2573 (18497)

### திருமண சேவை

1974ஆம் ஆண்டு, மகம் செவ்வாய அற்ற, கனடாவில் தொழில் செய்யும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. உடன் Sponsor மூலம் அழைத்துச் செல்லப்படுவார். தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.(18514)

1970ஆம் ஆண்டு, சதயம் செவ்வாய் அற்ற, Canada இல் இருந்து வந்துள்ள மணமகளுக்கு இங்குள்ள பொருத்தமான பட்டதாரி மணமகன் தேவை. ஸ்பொன்சர் மூலம் அழைத்துச் செல்லப்படுவார். தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (18513)

இல.298, கோயில் வீதியிலுள்ள கமலக்கண்ணன் - திருமணசேவை மறுபடியும் அதே இடத்தில் மீண்டும் இயங்குகின்றது என்பதை அறியத் தருகின்றோம். தகவல்: P.கமலக்கண்ணன். (18499)

### தேவை

கேபிள் தொலைபேசி விலைக்கு தேவை. தொடர்பு: T.P. 071-307619 (18524)

### தவறிவிட்டது

நாராய்ணசர்மா பத்மநாதசர்மா என்பவரது தேசிய அடையாள அட்டை (562190171V), விசேட அடையாள அட்டை, இந்து மதகுரு அடையாள அட்டை மற்றும் மோட்டார் வாகன வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான பற்றுச்சீட்டு அடங்கிய கைப்பை 27.05.2003 இல் தட்டாதெருச் சந்திக்கும் மேற்குக் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூநாறி மரத்தடி வீதி, கொக்குவில் மேற்கு என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும். சன்மானம் வழங்கப்படும். (18515)

எழுதுமட்டுவாழைச் சேர்ந்த சதாசிவம் வைத்திலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.49300256V), விசேட அடையாள அட்டை (இல.091504355) உணவு முத்திரை, நிவாரண அட்டை என்பன 08-05-2003இல் கோவிற் சந்தைக்கும் மந்திகைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மொடோன் ஸ்ரோஸ், நெல்லியடியில் அல்லது முருகையா சங்கீதன், துன்னாலை மேற்கு, கரவெட்டியில் ஒப்படைத்துதவவும். (18492)

பளைபி- தெற்கு, வசாவிளானைச் சேர்ந்த ந.வித்தியானந்தன் என்ப [illegible] தேசிய அடையாள அட்[illegible] இல.8?0153398V) யாழ். நக[illegible] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible] பளை[illegible] ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (18504)

### கைமாறிவிட்டது

25ஆம் திகதி முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் வருகையில் கறுப்புநிற Bag கைமாறிவிட்டது. தயவுசெய்து மாறி எடுத்தவர்கள் இல.14, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். T.P. 222 5576 (18488)

# அரியாலையில் மணல் திருட்டு தடையின்றித் தொடர்கிறது!

## காணி உரிமையாளர்கள் விசனம்

அரியாலை,மே29

அரியாலைப் பகுதியில் தற்போது சட்டவிரோதமாக மணல் அகழபபடுவது இரவுவேளைகளில் மும்முரமாக இடம்பெற்று வருகின்றது.

இரவுவேளையில் இப்பகுதிக்கு உழவு இயந்திரங்கள் மற்றும் லான்டமாஸ்ரர்களில் வரும் சட்டவிரோதிகள குடியிருப்பற்ற தனியார் காணிகளில் மணல் அகழ்கின்றனர்.

சட்டவிரோதமாக மணல் அகழப்படும்போது அவ்விடத்துக்குச் செல்லும் காணி உரிமையாளர்கள் மணல் அகழ்வோரால் விரட்டியடிக்கப்படுகின்றனர்.

இந்த சட்டவிரோத மணல் அகழ்வை உடன் தடுத்து நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இச்சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க நல்லூர் பிரதேச செயலர் தனிக்குழுக்களை அமைத்துள்ளபோதிலும் மணல் திருட்டு தொடர்வது குறிப்பிடத்தக்கது. (ஒ-17)

# விளையாட்டு வீரருக்கு பாம்பு கடித்தது!

யாழ்ப்பாணம்,மே29

பருத்தித்துறையைச் சேர்ந்த சி.நவநாதன் (வயது 21) என்ற கிரிக்கெட் வீரர் முள்ளியவளையில் பாம்புக் கடிக்கு இலக்கானார்.

வடக்கு - கிழக்கு விளையாட்டுத திணைக்களத்தினால் நடத்தப்படும் மாகாண மட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் முள்ளியவளை வித்தியானந்த மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பங்குபற்றச்சென்ற மேற்படி வீரர் இரவு படுக்கைக்குச் சென்ற போது பாம்புக் கடிக்கு இலக்கானார். இவருக்கு முள்ளியவளை பொன்னம்பலம் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார். (ஒ-5)

## ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்துக்கான பிரதேச பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தல்

### AREA REPRESENTATIVE

அரச, தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை உள்வாங்கியதும், காப்புறுதித் துறையில் முன்னணிவகித்துவருவதுமான பிரபல காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் தனது காப்புறுதிச் சேவையை விஸ்தரிக்கும் முகமாக பிரதேச பிரதிநிதிகளை உள்வாங்க உள்ளது.

அடிப்படைத் தகைமைகள்:

* க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி எய்தியிருத்தல் வேண்டும்.
* காப்புறுதித்துறை பற்றிய அறிவும் வெளிக்கள வேலையில் முன் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி தகைமை உடையோர் சுயவிவரக்கோவையுடன் 06-06-2003, 07.06.2003 அன்று காலை 10.00 மணிக்கு இல.165, மானிப்பாய் வீதியிலுள்ள ஜனசக்தி அலுவலகத்துக்கு சமுகம் தரவும்.

'காப்புறுதி என்றால் ஜனசக்தி'

JANASHAKTHI INSURANCE CO.LTD
District Office,
No.165, Manipay Road, Jaffna. (18509)

## வாடகைக்கு வீடு உடனே தேவை

யாழ்ப்பாணக் கச்சேரிக்கு 2 கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்தில் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று தனது காரியாலயமும் வதிவிடமும் சேர்ந்து அமைப்பதற்கேற்ற சகல வசதிகளைக் கொண்ட வீடு ஒன்றை வாடகைக்கு எடுக்க விரும்புகின்றது. இரண்டு பெரிய அறைகள் (இணைந்த குளியலறைகளுடன்), அலுவலகப் பாவிப்புக்கான பெரிய அறை, இரண்டு வாகனங்கள் நிறுத்தக்கூடிய இடவசதியுடன் அமைதியான சூழலில் உள்ள வீடு விரும்பப்படுகின்றது.

முற்பகல் 7.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி இல. : 222-3166 (18511)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 01 - 1980



உதிர்வு 23 - 05 - 1998

### பரராசசிங்கம் பிரகலாதன் (பிரகாஷ்)

(உயர்தர வகுப்பு மாணவன் - நயினாதீவு மகா வித்தியாலயம்)

திதி: 29-05-2003

அன்பின் பிரகாஷே!
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
புன்னகை பூக்குமுந்தன் பொன்முகத்தை மறப்போமா?
இன்னுமொரு பிறப்பெடுத்து எம்முன்னே வந்துவிடு மகனே!

5 A வட்டாரம்,
நயினாதீவு. (18520)

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## பிறந்தநாள் வாழ்த்து



பிளங்கன் லொக் (Blancon Lock) ஜேர்மனியில் வசிக்கும் சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த **திரு.இராசையா விஜயகுமார்**, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த **திருமதி தவராணி விஜயகுமார்** தம்பதிகளின் அன்புச் செல்வங்களான

**செல்வன் அபிமாஷ்**

தனது ஏழாவது பிறந்த நாளையும்(29.05.2003)

**செல்வி அஜேவி**

தனது ஐந்தாவது பிறந்தநாளையும் (01.05.2003) உடுப்பிட்டி றோட், வதிரியிலுள்ள பெரியம்மாவின் இல்லமான பாக்கிய பவனத்தில் தமது அப்பா, அம்மா, தம்பி அபிமான் ஆகியோருடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.

இவர்களை அப்பா, அம்மா, தம்பி அபிமான், அப்பப்பா, அப்பம்மா, பெரியம்மா குடும்பத்தினர், மாமாமார் குடும்பத்தினர், பெரியப்பா குடும்பத்தினர், சித்தப்பாமார் குடும்பத்தினர், சித்தி, மாமாமார் மற்றும் உற்றார், உறவினர்கள் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ மனமார வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
உடுப்பிட்டி றோட், வதிரி. (சி-28120) பெரியப்பா.



### ஒட்டகப்புலம் புனித அமலோற்பவ மாதா ஆலய திருவிழா அறிவித்தல்

ஒட்டகப்புலம் புனித அமலோற்பவ மாதா ஆலய திருவிழா நாளைமறுதினம் (31-05-2003) சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஒட்டகப்புலத்தில் கொண்டாடப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லவிருக்கும் பக்தர்களுக்கான் வாகன ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பஸ் 31-05-2003 சனி காலை 7 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் இருந்து புறப்படும்.

(18517) - நிர்வாகத்தினர்.




உலகப் புகழ் பெற்ற L.G
சலவை இயந்திரங்கள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

# சுயநிர்ணயத்துடன்கூடிய வாழ்வு தமிழருக்கு கிடைப்பதே தென்பகுதி மக்களின் விருப்பம்!

## தேசிய சமாதானப் பேரவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே29

தமிழர்களுக்கு சுயநிர்ணயத்துடன் கூடிய வாழ்வு கிடைக்கவேண்டும் என்பதே பெரும்பாலான தென்பகுதி மக்களின் தற்போதைய விரும்பம்.

- இவ்வாறு தெரிவித்தார் கொழும்பு தேசிய சமாதானப் பேரவைத் தலைவர் எஸ்.பாலகிருஷ்ணன்.

'பாதுகாப்பு மற்றும் சமாதானம் குறித்த கூட்டு நடவடிக்கைகள்' என்ற தொனிப்பொருளிலான மக்கள் அரங்கம் யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி வி.தியாகராசா தலைமையில் நடைபெற்ற மாலை அமர்வில் 'தென்னிலங்கையின் அரசியல் நிலைப்பாடுகளும் சமாதான நடைமுறைக்கான சவால்களும்' என்ற தலைப்பில் உரையாற்றும்போதே பாலகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும், சுயகௌரவத்துடனும் வாழக்கூடிய நிலையிலேயே நிரந்தர' சமாதானம் ஏற்படும். அந்தவகையில் இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தம் முற்று முழுதாக நிறுத்தப்பட்டு நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் எனப் பெரும்பாலான சிங்கள மக்கள் விரும்புகின்றனர்.

அதேவேளை - தென்பகுதியிலுள்ள சில அரசியல்வாதிகளும் குறிப்பிட்ட எண்ணிக்கையான மக்களும் தமது இருப்பை உறுதிப்படுத்துவதற்காக சமாதான முயற்சிகளை எதிர்த்து வருகின்றனர்.

தற்போது நிலவுவது சமாதானமல்ல. யுத்தத்தில் ஈடுபட்ட இருபகுதிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் அற்ற சூழ்நிலையே இப்போது காணப்படுகின்றது. இதனைச் சரியாகப் புரிந்துகொள்ளாத சிலர் சமாதானம் ஏற்பட்டுள்ள இக்காலப்பகுதியில் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டுமென்று கோருகின்றனர். கடந்த காலங்களில் யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பினரும் மேற்கொண்ட பல்வேறு வகையான வரம்பு மீறிய தாக்குதல்கள், படுகொலைகள் மற்றும் அழிவுகள் என்பன தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இதன் பின்னணியில் பார்க்கும்போது, இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது சிக்கலானதும், பாரிய நடவடிக்கைகள் பலவற்றின் மூலமாக முன்னெடுத்துச் செல்லப்படவேண்டியதுமான ஒன்றாகவுள்ளது.

ஆயுதங்கள் மீதான நம்பிக்கையை இழந்த காரணத்தினால் இருதரப்பினரும் சமாதானப் பேச்சுக்கு முன்வரவில்லை. இருதரப்புக்களுக்கும் இடையில் உள்ள முரண்பாட்டை தீர்த்து ஜனநாயக நடைமுறைகள்மூலம் இயல்பு வாழ்வை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகவே அரசும் புலிகளும் சமாதானப் பேச்சுகளை நடத்துகின்றனர்.

இதனால் இருதரப்பினரும் தத்தமது இராணுவ சமநிலையைப் பேணுவதன் மூலமே பேச்சுகளில் பேரம்பேசும் சக்தியை தக்கவைத்துக் கொள்ளமுடியும்.

தமிழ் மக்களுக்கு வேண்டிய பூரண சுதந்திரத்துடனான தீர்வும் நிரந்தர சமாதானமும் ஏற்படுத்தப்படும்வரை விடுதலைப் புலிகள் தமது இராணுவத்தைப் பலப்படுத்துவது தவிர்க்கமுடியாதது.

சமாதானத்தை ஏற்படுத்துவது மிகச் சிக்கலானது. அதனால், இம் முரண்பாட்டினால் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ பாதிப்புக்குள்ளான எல்லா மக்களினதும் பங்குபற்றலை உறுதிப்படுத்துவதும், அவர்களின் தாங்குதிறன் கொண்ட ஆதரவை உத்தரவாதப்படுத்துவதும், அவர்கள் புரிந்துணர்வுடனான தீர்வுகளை மேற்கொள்வதை உறுதி செய்வதும் இச்சமாதான முயற்சியின் வெற்றிக்குத் தவிர்க்கமுடியாதவைகளாகும்.

சமாதான நடைமுறையின் வெற்றிக்கு மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய பாரிய நடவடிக்கைகளின் பின்னணியில்தான் தென்னிலங்கையின் அரசியல் நிலைமையையும் அதற்கான சவால்களையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

சமாதானம் தொடர்பாக தென் இலங்கை அரசியலில் ஒரே கருத்துக் கொண்டவையாகக் காணப்படுவதில்லை. இந்தநிலை உருவாவதற்கு பல காரணிகள் உடந்தையாக அமைந்துள்ளன.

நாடு, இனம், மதம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் பூர்வீகக் குடிகள் சிங்களவர்கள்தான். அவர்களால்தான் இந்த நாடு ஆளப்படவேண்டும் என தெற்கு மக்கள் எண்ணுகின்றனர்.

இலங்கையின் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு அதிகாரம் பகிரப்பட வேண்டியதன் முக்கியத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக அமைந்தாலும், அதிகாரப் பகிர்வு பெரும்பான்மையான ஆட்சிக்கு வழிவகுக்கும் ஒற்றையாட்சியின் கீழ்த்தான் நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற நிலைப்பாட்டையே இருபெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வலியுறுத்தி வந்துள்ளன. எனினும், சமீபத்தில் சமஷ்டி ஆட்சி முறையின்மூலம் இனமுரண்பாட்டைத் தீர்த்துக்கொள்ள ஐ.தே.கட்சி உடன்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் பலர் தமிழ் மக்களின் பிரச்சினையைப் பயன்படுத்தி தமது அரசியலை நடத்திவருகின்றனர்.

அரசுக் கட்டிலேறும் ஆசையில் இனவாத அரசியலைப் பலப்படுத்தி ஆளும் கட்சிகளின் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் தோல்வியடையச் செய்வதற்கு கட்சிகள் முயற்சிக்கின்றன. இந்த முயற்சியானது பல காலங்களாக இருந்து வந்தபோதும் தற்போதைய சமாதான சூழ்நிலைகளுக்கு எதிராக மக்களை அணி திரட்டக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

எதிர்க் கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் இடையில் நிலவுகின்ற கருத்து முரண்பாடுகள், போட்டிகள் மற்றும் இனவாத உணர்வுகள் இந்த நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பெரும் தடையாகவுள்ளன.

1956ஆம் ஆண்டிலிருந்து தமிழர்களுக்கு எதிரான இனவாதம் பேசிய தென்னிலங்கை அரசியல்வாதிகளே ஆட்சிபீடம் ஏறக்கூடிய சூழல் காணப்பட்டது. ஆனால், தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பவர்களுக்கே இப்போது தென்னிலங்கை அரசியலில் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது.

இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவதில் அரசசார்பற்ற அமைப்புக்கள், வெகுசன அமைப்புக்கள் மற்றும் இடதுசாரிக் கட்சிகள், மாற்றுத் தொடர்பூடகங்கள் போன்றவற்றின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

தென்பகுதியிலுள்ள பெரும்பாலான பத்திரிகைகள் சமாதானத்திற்கு ஆதரவான கருத்துக்களைப் பிரசுரிப்பது மிகவும் குறைவு. மாறாக இதற்கு எதிராகப் பரப்பப்படும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்து வருகின்றன. இந்தநிலை மாற்றப்படவேண்டும்- என்றார் பாலகிருஷ்ணன். (ம-5)



'ஜனசக்தி' காப்புறுதி நிறுவனத்தின் யாழ்.அலுவலகத்தில் பூரண வாகனக் காப்புறுதி பெற்றிருந்த ஏ.யூட்குமார் என்பவரின் வாகனம் விபத்துக்குள்ளானது. இதற்கான காப்புறுதிக் கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை ஏ.யூட்குமாரிடம் யாழ்.கிளை முகாமையாளர் கே. எம்.நடராஜா வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.




**தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியூஸிலண்ட் மில்க் லங்கா நிறுவனம் 10லட்சம் ரூபா பெறுமதியான அங்கர் பால்மா, அங்கர் பவர்மோல்ட் ஆகியவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளது. இதற்கான கையளிப்பு வைபவத்தில் நியூஸிலண்ட் மில்க் லங்கா முகாமைப் பணிப்பாளர் மத்யூ ஓல்டாம் நன்கொடைப் பத்திரத்தை சமூக சேவைகள் அமைச்சர் ரவீந்திர சமரவீரவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். நியூஸிலண்ட் மில்க் லங்கா நிறுவன நிதிப்பணிப்பாளர் செத்தியா சிறினாமுனியும் அருகில் உள்ளார்.**

# மீளக்குடியமரும் சில குடும்பங்கள் புனர்வாழ்வு உதவிகளில் புறக்கணிப்பு

## கண்ணபுரம் மக்கள் கவலை

பழுகாமம்,மே29

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அம்பாறை மாவட்ட கண்ணபுரம், கண்ணபுரம் கிழக்கு, 37ஆம் கிராமம், நவக்கிரிநகர், செல்வாபுரம் போன்ற இடங்களில் மீளக்குடியர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வுக்கான உதவிகள் கிடைக்கவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக சர்வோதயம் ஊடாக சுமார் நூற்றெண்பது குடும்பங்களுக்கு விதைநெல், பசளை என்பன வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை - 37ஆம் கிராமம், செல்வாபுரம் ஆகியவற்றுக்குக் கூரைத்தகடுகளும் கூடாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய கிராமங்களுக்கு இவ்வுதவிகள் கிடைக்கவில்லையென மக்கள் விசனம் தெரிவித்தனர். முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்த இம்மக்கள் தமது சொந்த இடங்களை அடையாளங்கண்டு மீளக் குடியமர ஆர்வமாக உள்ளபோதிலும், பொருளாதாரம் அவர்களுக்கு இடம் கொடுப்பதாக இல்லை.

இந்நிலையில், மீள்குடியேறுவோருக்கான புனர்வாழ்வு உதவிகள்கூட சரியாகக் கிடைக்காமை பெருங்குறையாக உள்ளதாகப் பொதுமக்கள் கருத்துக்கூறினர்.

# மாலைதீவு மசகு எண்ணெயை சுத்திகரிக்க இலங்கை இணக்கம்

கொழும்பு,மே29

மாலைதீவு அரசிற்கான மசகு எண்ணெய் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்ள இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளது.

மாலைதீவின் வர்த்தக மற்றும் நுகர்வோர் துறை அமைச்சர் அப்துல் ஜமீன் அண்மையில் இலங்கைக்கு விஜயஞ்செய்தபோது அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் இது குறித்துக் கலந்துரையாடியபோதே இந்த இணக்கம் காணப்பட்டது.

மாலைதீவு தற்போது கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் இருந்து மசகு எண்ணெயை கொள்வனவு செய்து 3ஆம் தரப்பு நாடொன்றின்மூலம் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

மாலைதீவின் எண்ணெய் சுத்திகரிப்புப் பணிகளைப் பொறுப்பேற்றதன்மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்றிறன் மேலும் அதிகரிக்கும். அதேவேளை, வெளிநாட்டு வருமானமும் அதிகரிக்கும் என்றும் வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவிக்கிறது.

### கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பாக

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் டென்மார்க் அமைப்பு ஒப்பந்தம்

கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் நேற்றுமுன்தினம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் கைச்சாத்திட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் இந்த நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக்கழக முதனமைப் பணியகத்தில் நடைபெற்றது.

இதில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, ஆஸ்ரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த சங்குரு பரராசசிங்கம், டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பிரதிநிதி எரிக் வின்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் உதவியுடன் பூநகரிப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ள இருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது. (ஓ-12)

### உரிமத் தகடுகள் விநியோகம்

மல்லாகம்,மே29

சுன்னாகம், வலி.தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகம், ஏழாலைப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு தனது பணியாளர்களை அனுப்பி மாணவர்களின் சைக்கிள்களுக்கு உரிமத் தகடுகளை விநியோகித்து வருகின்றது.


ஏழாலை மகாவித்தியாலயம், ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயம், ஏழாலை சைவமகாஜன வித்தியாலயம் என்பவற்றில் இவ்வாரம் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை - ஏழாலையின் பிரதான சந்திகளிலும் சைக்கிள் உரிமத் தகடு வழங்கும் நடவடிக்கைகளில் வலி. தெற்கு பிரதேச சபை உபபணிமனை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஒ-ரி)

### நஷ்டஈடு வழங்க நடவடிக்கை

இம்மாத முற்பகுதியில் குடாநாட்டில் வீசிய கடும் காற்றின் காரணமாக வலி.வடக்கில் பல வீடுகளும் பயன்தரு பயிர்களும் அழிவுக்குள்ளாகின.

இந்தச் சேதங்களுக்கு தற்செயல் இடர்பாடு நிதியின்கீழ் வரையறுக்கப்பட்ட நஷ்டஈடுகளை வழங்க வலி. வடக்கு பிரதேச செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, கடும் காற்றினால் பாதிப்படைந்தவர்கள் தத்தமது பிரிவுக் கிராம அலுவலர்களுடன் இது குறித்து தொடர்பு கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-ரி)

# சாயி சிந்தனை



## மோட்சத்துக்கு வழி

ஒவ்வொரு உயிரிலும் கடவுள் இருக்கின்றார். ஜீவனே இறைவன். இறைவனே ஜீவன். ஆகவே, எந்த விலங்கினையும் பலியிடுதல் தகாத காரியம். பலிகொடுத்து யாகம் செய்வோர் சிலர் புத்தரை அணுகி, இந்த விலங்கு மோட்சத்தை அடைய நாங்கள் பலியிடுவதன் மூலம் உதவி செய்கிறோம் என்றனர். புத்தர் இவ்வாறு கூறியவர்களைக் கேலிசெய்தார்.

விலங்கிற்கு மோட்சம் தருகிறீர்களே! உங்கள் மனைவி, தாய், தந்தை, பிள்ளைகள் இவர்களுக்கும் மோட்சம் பெற ஆசையுண்டு அல்லவா? அவர்களைப் பலியிடுதல்மூலம் மோட்சம் கொடுப்பீர்களா? என்று கேட்டார்.

விலங்கினைப் பலியிடுவதால் மோட்சம் கிட்டுவதில்லை. பலியிடுதல் மிகக் கொடியபாவம். தங்கள் சுகபோகத்திற்காக சிலர் அடிப்படைத் தத்துவங்களை மாற்றிவிட்டார்கள். உயிரினங்களுக்கு துன்பம் தருதல் தகாது. மனிதனிடம் நிறைந்திருக்கும் அன்பு என்னும் கடவுள் மிருகங்கள், பட்சிகள் இவற்றினுள்ளும் நிறைந்திருக்கிறது.

ஆகவே, உங்களிடம் உள்ள அன்பை பறவைகள், விலங்குகள், சக மனிதர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இதுவே உண்மையான மோட்சத்துக்கு வழி. பரிபூரணமான அன்பு உங்களிடம் நிறைந்திருக்கும்போது அதுவே மோட்சம். பரிபூரணமான அன்பை எல்லோரிடமும் பகிர்ந்துகொள்ளும்போது மோட்சம் பெறத் தகுதியுடையவராகிறீர்கள்.

*(ஆதாரம்: பிருந்தாவனத்தில் கோடைமழை)*

### தமிழரின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு

# பௌத்தமத பீடங்களுடனும் புலிகள் உறவுபேண வேண்டும்!

### களுத்துறை ஹஸ்வத்துறே அசாஜி தேரர் கோரிக்கை

வலி.வடக்கு,மே29

தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்ட பௌத்தமத பீடங்களுடன் விடுதலைப் புலிகள் தொடர்பு கொண்டு இருக்கவேண்டும். களுத்துறை மாவட்ட தாஸன்ன சாறி த்மயதன பௌத்தமதப் பாடசாலையின் அதிபர் ஹஸ்வத்துறே அசாஜிதேரர் இவ்வாறு கோரியுள்ளார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களைக்கொண்டு சென்ற விடுதலைப் புலி உறுப்பினர்களான அனபரசன், எழிலன், இராவணன் ஆகியோரிடம் தேரர் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

பொம்புவள மஹாவிகாரையில தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள், சமூக அபிவிருத்தி அமைச்சர் சந்திரசேகரன் மற்றும் பிக்குகள் ஆகியோர் பங்கேற்ற கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வண. ஹஸ்வத்துறே அசாஜிதேரர் மேலும் கூறியதாவது:-

நல்ல மனிதர்களாகவும் மனிதாபிமானம் உடையவர்களாகவும் இருப்பவர்கள் அரசியலுக்குச் செல்கின்றனர். ஆனால், அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டதும் அவர்கள் வித்தியாசமான முறையில் பேசுகின்ற நிலைமையே இன்று காணப்படுகின்றது.

அரசியல் கட்சிகளின் செயற்பாடானது ஒரு கேலிக்கூத்தாக இன்று காணப்படுகின்றது. அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நீண்டுகொண்டே சென்றால் பிரச்சினைகளும் அதிகரித்துக்கொண்டே செல்லும் இதனை சாதாரண மக்களும்கூட உணர்ந்துள்ளார்கள்.

மதத்தின் மீது தமிழீழ விடுதலை புலிகளுக்கு நம்பிக்கையுண்டா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. ஆனால், புலிகள் மத பீடங்களுடனும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கவேண்டும்.

அரசாங்கத்துடன் புலிகள் பேச்சுவார்த்தையை மேற்கொண்டுள்ளனர். ஆனாலும்கூட மத பீடங்களுடனான தொடர்பை தொடர்ந்தும் பேணிவர வேண்டும். இதன்மூலம் கீழ்மட்ட மக்களுக்கு உண்மையான நிலைமையை உணரவைக்க முடியும்.

தற்போது நாட்டில் நிலவும் பிரச்சினையைக் கொண்டு கிறிஸ்தவ மதத தலைவர்கள் பிரபாகரனின் உதவியுடன் கிறிஸ்தவ மதத்தை வளர்த்துக் கொள்வதாக பௌத்தமக்களிடையே ஓர் எண்ணம் காணப்படுகின்றது. ஆனால், பிரபாகரன் ஒரு மதத்துக்கு ஆதரவாக இருக்கக்கூடியவர் என்று நாம் கருதவில்லை.

திருமலையில் இந்திய இராணுவம நிலைகொண்டு இருந்த காலத்தில் சிங்கள மக்களை மீளக்குடியமர அனுமதிக்கவில்லை. இதனால் எமது மககள் பலவித சிரமங்களை அனுபவித்தனர். தற்போது தமிழர்களை இலங்கை இராணுவம் மீளக் குடியமரவிடாது தடைசெய்கின்றது. இந்நிலையில் அந்தத் தமிழ் மக்களுடைய உணர்வுகளை எம்மால் நன்கு புரிந்துகொள்ளமுடிகிறது.

ஒரே நாட்டுக்குள் ஓர் இனம் எந்தெந்த சுதந்திரங்கள், உரிமைகளை அனுபவிக்கின்றதோ அதே சுதந்திரத்தையும் உரிமையையும் அனுபவிக்கும் உரிமை அந்த நாட்டில் வாழும் ஏனைய இனங்களுக்கும் உண்டு.

இந்நாட்டில் சிங்கள மககள் அனுபவிக்கும் உரிமைகளையும் சுதந்திரததையும் தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும். இது தொடர்பான பிரசாரத்தை மேற்கொள்வதற்கு நான் என்றும் தயாராக இருக்கின்றேன். இத்துடன் ஏனைய மத பீடங்களுடனும் தொடர்புகொண்டு இதற்கான நடவடிககைகளை மேற்கொள்வேன் என்றார் தேரர்.

(ஏ-86)

# லொத்தர் சபை விவகாரம்; ஜனாதிபதி புதிய உத்தரவு

கொழும்பு,மே29

அபிவிருத்தி லொத்தர் சபையின் மீள் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகள் அனைத்தையும் நிறுத்திவைக்குமாறு அபிவிருத்தி லொத்தர் சபைத்தலைவருக்கு ஜனாதிபதி கடிதம் மூலம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

புதிய விற்பனைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவை பற்றிய விவரங்களை தமக்குத் தெரியப்படுத்துமாறும் ஜனாதிபதி அக்கடிதத்தில் பணித்துள்ளார்.

தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக பணியாளர்கள் அமர்த்தப்படுவதை நிறுத்துமாறும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இக்கடிதம் தொடர்பாக அபிவிருத்தி லொத்தர் சபைத் தலைவர் ஜே.கே.பொணண்டோ கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு பொறுப்பான அமைச்சர் மிலிந்த மொறகொடவின் உத்தரவின் பேரிலேயே நான் பணியாற்ற முடியும். ஆகவே, ஜனாதிபதியின் கடிதம் அமைச்சர் ஊடாக அனுப்பப்பட்டால் அதனை நிறைவேற்ற முடியும். (ஏ-12)

# படையினருக்கு வேண்டிய உதவிகளை கிராம அலுவலர்கள் வழங்க வேண்டும்!

### நல்லூர் பிரதேச செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே29

பாதுகாப்புப் படையினருக்கு வேணடிய உதவிகளை கிராம அலுவலர்கள செய்து கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தும் சுற்றறிக்கை ஒன்றை நல்லூர் பிரதேச செயலாளர் வி.வி.முருகையா கிராம அலுவலர்களுக்கு அனுப்பியுள்ளார்.

இராணுவத்தினர் ஒத்துழைப்புக் கோரும் சந்தர்ப்பங்களில் பெரும்பாலான கிராமசேவையாளர்கள் இராணுவத்தினருடன் ஒத்துழைப்பதில்லை என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் - இத்தகைய முறைப்பாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்கவேண்டும் எனவும்- அந்த சுற்றறிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பாதுகாப்புப் படையினருக்கு தேவையான உதவிகளை கிராம சேவையாளர்கள் செய்து கொடுக்கவேண்டுமெனவும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது குடாநாட்டில் சிவில் நிர்வாகம் இடம் பெறுவதாகவே அரசுதரப்பு கூறிவருகிறது. இந்நிலையில், சிவில்நிர்வாக நடவடிக்கைகளில் படையினர் தலையிடுவதை அங்கீகரிக்கும் உயர் அதிகாரிகளின் நிலைப்பாடு தொடர்பாக பொது அமைப்புகள் சமீப காலமாக எடுத்துக கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சாவற்கட்டில் மலசலகூடங்கள் அமைக்கத்திட்டம்

ஆனைக்கோட்டை சாவற்கட்டு பகுதியில் வாழும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 250 குடும்பங்களுக்கு மலசல கூடவசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக இப்பகுதியில் மலசல கூடவசதிகளற்ற குடும்பங்களின் விவரங்களையும் அவர்களினது மாதாந்த வருமானம் குறித்த விவரங்களையும் சேகரிக்குமாறு வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலாளருக்கு யாழ்ப்பாண அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மலசலகூடம் அமைப்பதற்கென தெரிவுசெய்யப்படும் குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் கட்டுவதற்கு தேவையான பொருள்கள் மற்றும் உபகரணங்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

### சமுர்த்தி அதிகார சபையின் கொடிதினம்

வலி.வடக்கு,மே29

சமுர்த்தி அதிகார சபையினால் இன்றும் நாளையும் கொடிதினம் கொண்டாடப்படவுள்ளது.

இளைஞர் விவகார சமுர்த்தி, அதிகாரசபை அமைச்சினால் முன்னெடுககப்பட்டுள்ள இக்கொடி தினம் மூலம் திரட்டப்படும் நிதி நலிவுற்ற மக்களின நல்வாழ்விற்காக பயன்படுத்தப்படவுள்ளது.

சமுர்த்தி அதிகார சபையின் கொடி தினத்தையொட்டி இன்றும் நாளையும் கொடிவிற்பனையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி தொண்டர்கள், சமுர்த்தி செயலணி உறுப்பினர்கள் ஈடுபடவுள்ளனர்.

# எமது பிள்ளைகள் அநியாயமாக போரில் மடிவதை அனுமதியோம்!

### காணாமற்போன படையினர் சங்கத் தலைவி உறுதி

கொழும்பு,மே29

மீண்டும் ஒரு யுத்தம் மூண்டு எமது பிள்ளைகள் அநியாயமாக மடிவதை நாம் இனியும் அனுமதிக்கப்போவதில்லை.

காணாமற்போன படையினர் பாதுகாவலர் சங்கத்தின் தலைவி விசாகா தர்மதாச இவ்வாறு தெரிவித்தார்.

தென்பகுதிப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அச்செவ்வியில் மேலும் அவர் தெரிவித்ததாவது:-

போர் இடம்பெற்ற போது மற்றவர்களைப் போல் நானும் பார்வையாளராகவே இருந்து வந்தேன். ஆனால் போரின் கொடூரம் எனது வீட்டுக்கதவைத் தட்டியபோதுதான் விழித்துக் கொண்டேன். என் போன்ற எத்தனையோ பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இழந்து வேதனை அடைந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளாயினும் சரி, படைவீரர்களானாலும் சரி, போரில் மடியும்போது அவர்களது பெற்றோர்கள் அடையும் துன்பங்கள் எந்தளவு என்பதனை எனது மகன் இறந்தபோது உணர்ந்து கொண்டேன்.

இந்தமண்ணின் இளைய தலைமுறை போரிட்டு மடிவதனை இனியும ஏற்கமுடியாது. இதற்காகவே என் போன்ற பாதிக்கப்பட்ட தாய்மார்களை ஒன்றிணைத்து சமாதானத்திற்காகப் போராடி வருகின்றேன்.

இன்று இராணுவத்தின் முக்கிய படைப்பிரிவாக விளங்கும் சிங்கறெஜிமண்ட் படைப்பிரிவின் தலைமையகத்தில் கடமையாற்றும் தொண்ணூறு வீத மானவர்கள் படையிலிருந்த சமயம் அங்கவீனமுற்றவர்களே.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது இந்தப் போர் எமக்கு தேவை தானா என்னும் கேள்வி எழுகின்றது. ஆட்சி அதிகாரத்தின் மீது ஆசை கொணடோரே இன்று போரை விரும்புகின்றார்கள். எமது பிள்ளைகளின் சடலங்கள் மீது ஏறி ஆட்சியைப் பிடிக்க முயலபவர்களை இனியும் அனுமதிக்கமாட்டோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### சமய சந்நிதியில்

தென்மராட்சி,மே29

சாவகச்சேரி பெரியமாவடி முருகமூர்த்தி கோவில் மஹோற்சவம் கடந்த 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தேர் உற்சவம் இன்று வியாழக்கிழமையும் தீர்த்தோற்சவம் நாளையும் நடைபெறும்.

(ஐ-117)

### கொழும்புத்துறையில் கூ.சங்கக் கிளை இன்று திறப்பு

அரியாலை,மே29

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கொழும்புத்துறை மந்தியில் அமைந்திருக்கும் 22ஆம் இலக்க கிளை இன்று காலை திறந்துவைக்கப்படவுள்ளது.

கொழும்புத்துறை கணக்கர் சந்திக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றிலேயே மேற்படி கிளை இன்று தொடக்கம் செயற்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

### யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வலி.வடக்கு,மே29

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 230 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தின பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாகவும் ஆராயப்படவுள்ளன.

### தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே29

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் தொழில் வழிகாட்டல் பிரிவினர் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றினை இன்று வியாழக்கிழமை வேம்படி மகா வித்தியாலயத்தில் நடத்துகின்றனர்.

மேற்படி வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ சாதாரணதரம் மற்றும் உயர்தரம் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கான இக்கருத்தரங்கு இன்று காலை 9.30 மணி முதல் இடம்பெறும் என தொழில் வழிகாட்டல் ஆலோசகர் கோ.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

**இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு.**

அச்சுவேலி கோழிப்பண்ணையில் இறைச்சிக்கோழிகள் (லேயர், புறோயிலர்) விற்பனைக்குண்டு. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

விலை - ஒரு கிலோ ரூபா 120/-

பெறவிரும்புவோர் உடன் பிராந்திய கோழிப்பண்ணை அச்சுவேலியில் பெற்றுக்கொள்ளலாம். (C/28137)

**மாநகரசபை. யாழ்ப்பாணம்**

**கட்டட நிர்மாண, வீதி அமைப்பு வேலைக்குத் தேவையான மூலப் பொருள்களை விரைவாக வழங்கக் கூடியவர்களைக்கோருதல்**

2003 ஆம் ஆண்டுக்கான மாநகர சபையின் அவசர வேலைத் திட்டங்களுக்குத் தேவையான கீழ்க்காணும் மூலப் பொருள்களை விரைவாக மாநகரசபைக் களஞ்சியத்திற்குக் கொண்டுவந்து ஒப்படைக்கக் கூடிய வழங்குநர்கள் தங்களால் ஒருமாத காலத்தினுள் ஒப்படைக்கக்கூடிய மூலப்பொருள்களின் அளவும், ஒரு கியூப் கல், மணல், வேறு பொருள்களுக்கான விலையையும் கொண்டதாக படிவ அமைப்பில் தயாரித்து 02.06.2003 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்குமாறும், அதனைத் தொடர்ந்து மு.ப. 11.00மணிக்கு இடம்பெறும் கலந்துரையாடலிலும் பங்குபற்றுமாறும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

1) கிரசர் கல், கண்டகல 1/2", 3/4", 1 1/2", 1", 2", 4", 6", 9" ஒவ்வொரு கியூப்பின் விலை குறிப்பிடவும்.

2) நாகர் கோயில் மணல், அரியாலை மணல், கண்டாவளை மணல், ஊரியண், செம்மண், கிரசர் டஸ்ட் வேறும் பாவனையில் உள்ள மணல் - ஒவ்வொரு கியூப்பின் விலையையும் குறிப்பிடவும்.

3) ஒரு மாத காலத்தில் வழங்கக் கூடிய பொருள்களின் அளவினைக் குறிப்பிடவும்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம். (C/28133)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் நாகரத்தினம்

வதிரியைப் பிறப்பிடமாகவும் மாலுசந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நாகரத்தினம் நேற்று(28.05.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் யோகநாதன், யோகரட்ணம், யோகேஸ்வரி, யோகமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இ.பரமதாஸ்(சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை), மு.ஜெயபகீரதன்(சுவீஸ்), வை.சிறிஸ்கந்தராசா (இலங்கை வங்கி பருத்தித்துறை), திருமதி யோ.இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் தங்கம்மா கிருஷ்ணபிள்ளையின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(29.05.2003) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.பரமதாஸ்
(மருமகன்)

'அன்னதாமலைக',
மாலுசந்தி. (C/28140)

### கந்தையா சோமசுந்தரம்

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, கருவேலடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கனடாவில் மார்க்கம் பகுதியில் வசித்து வந்தவருமாகிய கந்தையா சோமசுந்தரம் அவர்கள் 27-05-2003 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விதானையார் முருகேசு கந்தையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான துரைராசசிங்கம் - வதிரியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான குமரையா, தேவராசா, கனேஸ், மார்க்கண்டு, கிளி, யோகம்மா ஆகியோரின் சகோதரரும் ஜேர்மனியில் வசிக்கும் ஜெயசுந்தரம், காலஞ்சென்ற ஜெயபிரகாஷ் (கொக்குவில்) மற்றும் ஜெயகௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சர்வாயகம் (கனடா), தேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் துஷானி, பிரகாஷினி, ஆதித்தியா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற செல்வரெட்ணத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.05.2003) வியாழக்கிழமை Highland Memorial Garden இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனஞ் செயயப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சசி, கௌரி
T.P.: 905-477-5795

கனடா (C/28532)

# நாய் மட்டுமன்றி ஆடு, மாடு, வௌவால் கூட நீர் வெறுப்பு நோயைப் பரப்பிட வல்லவை!

நீர்வெறுப்பு நோய் விலங்குகளிலிருந்து மனிதனுக்குத் தொற்றக் கூடிய மிகவும் ஆபத்தான வைரஸ் நோயாகும். மனிதனில் இந்நோய் நூறுவீத இறப்பினை ஏற்படுத்துகிறது. நாய், நரி, கீரி போன்ற காட்டு விலங்குகள் இந்த வைரஸ் கிருமியை பரப்புவதில் முக்கிய பங்கேற்கின்றன. காட்டு வௌவால்கள் இயற்கைக் காவிகளாகச் செயற்படுகின்றன. இவை நோய்க்கிருமியைக் கடத்துகின்றன. ஆனால், நோய் குணங்குறிகளை வெளிக்காட்டுவதில்லை.

மனிதனில் ஏற்படும் இந்நோய் 90வீதம் நாய்களிலிருந்தே தொற்றுகிறது. இவற்றில் 65வீதம் கட்டாக்காலி நாய்களிடமிருந்தும் 35வீதம் வீட்டில் சரியாகப் பராமரிக்கப்படாத நாயகளிடமிருந்தும் தொற்றுகிறது. 20வீதம் பூனைகளில் இருந்தும் 2வீதம் கீரிகள் மூலமாகவும் பரவுகின்றது. ஆனாலும் இந்நோய் மாடு, ஆடு, யானை என எந்த விலங்கினத்திற்கும் தொற்றக் கூடியது. இது பூனைகளால் மனிதருக்கு தொற்றும் போது மிகவும் அபாயகரமானது.

### நோய் தொற்றும் விதம்

நோயை ஏற்படுத்தும் வைரஸ் குறிப்பிட்ட விலங்கின் உமிழ் நீரிலேயே கடத்தப்படுகிறது. எனவே, இந்த வைரஸ் உடைய விலங்கு இன்னுமொரு விலங்கு அல்லது மனிதனைக் கடிக்கும்போது அல்லது ஏற்கனவே இருந்த புண் ஒன்றில் அதன் உமிழ் நீர் படும்போது நோய்க்கிருமி கடத்தப்படலாம். இதனைவிட நோய்க்கிருமிகளைக் காவும் வௌவால்கள் உள்ள குகைகளில் செல்லும்போது கிருமித தொற்றுள்ள காற்றை சுவாசிப்பதன் மூலமும் இந்நோயின் குணம் குறி தென்படாத ஒருவர் இறக்கும்போது அவரது விழிவெண்படலம் இன்னொருவருக்கு பொருத்தப்படும்போதும் இந்நோய் தொற்ற வாய்ப்புள்ளது. ஆனால இறுதியாகக் கூறப்பட்ட இருவழிகளிலும் மிகவும் அரிதாக நிகழக்கூடியனவாகும்.

நோய்க்கிருமித் தொற்றினைத் தொடர்ந்து முதலில் குறிப்பிட்ட இடத்திலுள்ள தசைக்கலங்களில் வைரஸ பெருக்கமடைகின்றது. இது சில கிழமைகள் அல்லது மாதங்களுக்கு இடம்பெறலாம். பின்னர் பெருக்கமடைந்த வைரஸ் கிருமிகள் நரம்பு




நார்களினூடாக கடத்தப்பட்டு குறிப்பாக மையநரம்புத் தொகுதியையும் உமிழ்நீர் சுரப்பியையும் தாக்கி அங்கு திரும்பவும் பெருக்கமடைகின்றன. பின்னர் அங்கிருந்து சதயம் சிறுநீரகம், தோல் அதிரீனற்சுரப்பி, விழிவெண் படலம் போன்ற உறுப்புகளையும் தொற்றுகின்றன. இந்நிலையில் உமிழ் நீருடன் வைரஸ் வேறு ஒருவரைத் தொற்ற ஆரம்பிக்கிறது. நோய் அறிகுறிகள் வெளியில் தெரிவதற்கு 3அல்லது 4 நாள்களுக்கு முன்னரே நாயின் உமிழ்நீரில் வைரஸ்கள் காணப்படும். பூனைகளில் நோய் அறிகுறிகள் காட்ட ஒரு நாளைக்கு முன்னரே நோய்க்கிருமி அதன் உமிழ் நீரில் காணப்படும்.

இவ்வாறு ஒரு விலங்கு அல்லது மனிதன், நோயுடைய விலங்கால் கிருமித்தொற்றுக்கு உள்ளாகும்போது அந்த் விலங்கு அல்லது மனிதன் நோயை பெற்றுக்கொள்ளும் சாத்தியக் கூறுகள் பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.

★ தொற்று ஏற்பட்ட இடத்தில் உமிழ்நீருடன் சேர்ந்து செலுத்தப்பட்ட வைரஸின் அளவு.

★ நோய் தொற்று ஏற்பட்ட இடம். தலை, கழுத்து, புயம், தோள் போன்ற பகுதிகளெனின் மிகவும் விரைவாக நோயினைப் பெற்றுக்கொள்ளும் சாத்தியமுண்டு.

நோய் தொற்றல் ஏற்பட்டதற்கும் நோய் அறிகுறிகளை காட்டுவதற்கும் இடைப்பட்ட காலமே நோயுறும் காலமாகும். இந்நோய்க்கு இக்காலம் 3-9மாதங்கள் வரை வேறுபடலாம். ஒரு வருடமாக இருப்பதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு.

### நோய் அறிகுறிகள்

விலங்குகளில் இருவகைகளில் நோய் வெளிக்காட்டப்படலாம். அதில் ஒன்று ஆக்ரோஷமான வகை (Furious Form) மற்றையது அமைதியான வகை (Dumb Form).

ஆக்ரோஷமான வகை எளிதில் எல்லோராலும் அறியப்படக் கூடியதாகும். இவ்வகையில் விலங்கு நரம்புகளின் தூண்டுதிறன் அதிகரிப்பதன் காரணமாக எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியதாக இருக்கும். ஆள்கள் அல்லது பொருள்களைக் கண்டபடி கடித்தல், வாயினால் உமிழ்நீர் வடிதல், உணவு, நீர் உட்கொள்ள முடியாமை, தொண்டை தசைக்கால்கள் பாதிக்கப்படுவதால் எதையும் விழுங்க முடியாமை, நோக்கமின்றி சுற்றுதல், குரல் மாறுபடல், ஒதுக்குப்புறமான இடங்களில் ஒளிந்து கொள்ளல் போன்ற அறிகுறிகள் தென்படும்.

அமைதியானவகை பலரின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப் படாததாகும். இதனால் நோய் பரவும் ஆபத்து இதில் அதிகம். இங்கு விலங்கு மிகவும் அமைதியாக காணப் படும்.(ஏற்கனவே ஆக்ரோஷமான ஒரு விலங்கும் அமைதியாகப் போய் விடலாம்) உணவு, நீர் உட்கொள்ளாது சோர்வு வாதம் அவதானிக்கப்படலாம் (Paralysis), குரைத்தல் அல்லது கத்துதல் படிப்படியாக நின்று போகலாம், சுவாசிப்பதில் கஷ்டம் காணப் படலாம். நோய் அறிகுறிகள் வெளிக்காட்டப்பட்டு 8-10நாள்களில் இறப்பு ஏற்படும்.

மனிதரில் காய்ச்சல், நீர் உட்கொள்ள முடியாமை (நீர் வெறுப்பு), மூளைக்காய்ச்சல், சுவாசிப்பதில் சிரமம் ஆகியவை காணப்படும். சுவாசம் இழக்கப்படுவதன் காரணமாக இறப்பு ஏற்படும். எனினும், இந்நோய் விஷயத்தில் நோய் அறிகுறிகள் வெளிக்காட்டப்பட முன்னர் ஒரு விலங்கு அல்லது மனிதன் சந்தேகத்திற்கிடமான ஒரு விலங்கால் பாதிக்கப்படும்போது உடனடியாக நாம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிந்திருப்பது அவசியம்.

### எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்

இந்நோய் ஏற்படுத்தும் வைரஸ் கொழுப்பு பதார்த்தத்தினாலான இரட்டைப் படைகளை தன்னை சுற்றிலும் கொண்டிருப்பதனால் ஒரு விலங்கோ மனிதனோ பாதிக்கப்படும் போது காயத்தில் நன்றாக சவர்க்கார நீரினால் அல்லது 70வீத அற்கஹோலினால் கழுவுவது நல்லது. அத்துடன் உடனடியாக ஏற்பூசி போடப்படுவதும் அவசியம் இது பொதுவான விடயமாகும்.

ஒரு விலங்கு பாதிக்கப்படும்போது, பாதிக்கப்பட்ட விலங்குக்கு ஏற்கனவே விசர்நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்பட்டிருந்தால் மீண்டும் ஒரு தடவை அந்த தடுப்பு மருந்தினை ஏற்றிய பின் 6கிழமைகளுக்கு அவதானிக்க வேண்டும். நோய் அறிகுறிகளை காட்டாவிட்டால் அங்கு நோய் ஆபத்து இல்லை என்பதாகக் கொள்ளலாம்.

பாதிக்கப்பட்ட விலங்கு ஏற்கனவே தடுப்பு மருந்து ஏற்றப்படாத விலங்காயின் உலக சுகாதார ஸ்தாபனம் அவ்விலங்கை அழித்துவிடும்படி சிபார்சு செய்கிறது.

மனிதர் பாதிக்கப்படும்போது, பாதிப்பை உண்டு பண்ணிய விலங்கு ஏற்கனவே விசர்நோய்த்தடுப்பூசி ஏற்றப்படாததாயின் அல்லது அறியப்படாத விலங்காயின் உடனடியாக அதற்குரிய சிகிச்சைமுறை ஆரம்பிக்கப்பட வேண்டும். (தொடர்ச்சியாக 5ஊசிகள் ஏற்றப்பட வேண்டும்.) அத்துடன் பாதிப்பை உண்டு பண்ணிய விலங்கு அவதானிக்கப்படக் கூடியதாயின் 10-14 நாள்கள் அதனை அவதானித்து இந்த காலப்பகுதிக்குள் அவ்விலங்கு இறக்குமாயின் அதன் தலை வெட்டப்பட்டு உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு வைத்திய ஆராய்ச்சி நிலையத்துக்கு 10-12 மணிநேரத்தினுள் நோயை உறுதி செய்வதற்காக அனுப்பப்படல வேண்டும்.

பாதிப்பை உண்டு பண்ணிய விலங்கு ஏற்கனவே தடுப்பூசி ஏற்றப்பட்ட விலங்காயின் 10-14 நாள்களுக்கு கவனமாக அவதானித்தல் வேண்டும். இக்கால எல்லைக்குள் அது நோய் அறிகுறிகளைக் காட்டவில்லையாயின் அது பாதுகாப்பானதாகக் கருதப்படலாம். எவ்வாறாயினும் இந்நோயினைப் பொறுத்தவரை நோய்த்தடுப்பே பிரதானமானது.

### விலங்குகளில் நோய்த்தடுப்பு

இலங்கையில் மொத்தம் 80லட்சம் வரையிலான நாய்கள் காணப்படுகின்றன. இவற்றில் 60வீதமானவை சரியாக பராமரிக்கப்படுபவை. உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபார்சின் படி நாய்க்குட்டியொன்று 6கிழமைகள் வயதையுடையதாக இருக்கையிலேயே முதலாவது விசர்நோய்த் தடுப்பூசி வழங்கப்படவேண்டும். பின்னர் 3மாதங்கள் வயதையுடையதாக இருக்கையில் திரும்பும் ஒரு முறை இத்தடுப்பூசி வழங்கப்படல் வேண்டும். பின்னா ஒவ்வொரு வருடமும் அதன் வாழ்க்கைக் காலம் முழுவதும் இத்தடுப்பூசி ஏற்றப்படல் வேண்டும்.

யாழ்.குடாநாட்டில இத்தடுப்பூசியானது சுகாதார திணைக்களத்தி னால் ஒவ்வொரு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவினூடாக தற்போது வழங்கப்படுகிறது. இது நாய்களில் சரியான தடுப்பூசி வழங்கும் திட்டத்தை செயற்படுத்துவதில் சில வரையறைகளை உண்டாக்குவது கண்கூடு. எனவே தனியார் மூலமாகவும் இத்தடுப்பு மருந்து தாராளமாக புழக்கத்திற்கு வருவது மிகவும் அவசியமாகும்.

**டாக்டர் எவ். ஜூலியானா**
**கால்நடை வைத்தியர்,**
**வேலணை.**

5வீதமான நாய்கள் கட்டாக்காலிகளாகும். இவை அழிக்கப்படவேண்டும். இந்த நடவடிக்கையும் சுகாதாரப பகுதியினர் மற்றும் மாநகர சபையினர் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிற போதிலும் சில பகுதிகளில் இந்தக் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப படுத்துவது ஒரு சவாலான காரியமாகவே உள்ளது.

இன்னும் 10 வீதமான நாய்கள் உரிமையாளர்களால் கைவிடப்பட்டவையாகவும் 15வீதமானவை சமூகமாக பராமரிக்கப்படுபவையாகவும் உள்ளன. இவைகளே மிகவும் பிரச்சினைக்குரிய வகுப்புகளாகும். இவை அழிக்கப்படுவதுமில்லை; இவற்றிற்கு தடுப்பூசி ஏற்றப்படுவதுமில்லை. எனவே சரியான நோய்த்தடுப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது இவை கவனத்தில் கொள்ளப் படுவது அவசியம் அத்துடன் வளர்ப்பு பூனைகளுக்கு தடுப்பூசி வழங்குவது பொதுவாக கவனத்தில் கொள்ளப் படுவதில்லை. வளர்ப்பு பூனைகளுக்கும் கிரமமாக தடுப்பூசி ஏற்றப்படல் அவசியம்.

### மனிதரில் தடுப்பு

பொதுமக்கள் தமது வளர்ப்பு பிராணிகளுக்கு உரியமுறையில் தடுப்பூசி வழங்குவது மனிதனுக்கு ஏற்படக்கூடிய நோயை பெருமளவு தடுக்கும். அதைவிட இந்நோயினால் பாதிக்கப்படும் சந்தர்ப்பம் அதிகம் உடையோர் (மிருக வைத்தியர்கள், மிருக வைத்திய அலுவலகத்தில் பணிபுரியும் சிற்றூழியர்கள், மருத்துவ ஆய்வுகூட உத்தியோகத்தர், கொல் களத்தில் பணிபுரிவோர் போன்றவர்கள்) முன்கூட்டியே முன்தடுப்பு சிகிச்சை ஒன்றினைப் பெற்றுக்கொள்வது அவசியம். இதில் 1ஆம், 7ஆம், 28ஆம் நாள்களில் தடுப்பூசி ஒன்றும் கடைசி ஊசி ஏற்றப்பட்டு ஒரு வருடத்திற்கு பின் இன்னுமொரு தடுப்பு ஊசியும் ஏற்றப்படும். பின்னர் ஒவ்வொரு 3-5வருடங்களுக்கு ஒருமுறை இத் தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்ளலாம். இது ஒருவரின் இரத்தத்தை பரிசோதனை செய்து அதிலுள்ள பிறபொருள் எதிரிகளின் அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படும். இவ்வாறு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட நபர், ஒரு விலங்கினால் தொற்றுதலுக்குட்பட்டால் அவர்கள் கடைசியாக தடுப்பூசி பெற்ற காலத்தை பொறுத்து ஒரு தடுப்பூசி மட்டும் ஏற்றிக்கொண்டால் போதுமானது. இவர்கள் இத் தடுப்பூசியை ஏற்றியதற்காக ஒரு அடையாள அட்டையை வைத்திருப்பதும் சிறந்ததாகும். ◆


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 477 |
| திகதி | 27.05.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல. 4943132-4956559

வெற்றி இலக்கங்கள் 15 18 19 26

லக்கினம் மேடம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,668,850/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 299,449 | 10 | 2,994,490 |
| 2 இலக்கங்கள் | 27,488 | 20 | 549,760 |
| 1 இல + லக்கினம் | 27,270 | 30 | 818,100 |
| 2 இல + லக்கினம் | 2,519 | 100 | 251,900 |
| 3 இலக்கங்கள் | 741 | 500 | 370,500 |
| 3 இல + லக்கினம் | 57 | 5,000 | 285,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 357,528 | - | 5,669,750 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,669,750/-

தொடர் இல. 5932980க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 மே 30ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
4944061-9-92
4954598-1-53
4950193-7-36
4948965-3-63
4946828-3-53

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

## அளப்பரிய சேவையை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



தமது 30 வருட மகத்தான சேவையை நிறைவு செய்து ஓய்வுபெற்றுள்ள தன்னலங்கருதாப் பண்பாளர் எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய வடவலய மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர்

**உயர்திரு.சி.இளம்பிறைநாதன்**

அவர்களின் அளப்பரிய சேவையை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன். எம்மை இன்முகத்தோடு வரவேற்று தொழிலில் காணப்படும் குறைகளை உன்னிப்பாக விசாரித்து தம்மால் இயன்றவரை உதவிசெய்யும் மனப்பாங்கு நிறைந்த மாமேதை அவர்கள் கடவுள் கிருபையால் நலமுடன் மென்மேலும் சிறப்புறப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்:

**லாலா சோப்**

(c/28131) அச்சுவேலி.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியை

**திருமதி மேகலா வசந்தகுமார்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை. A/L 2002 கலைப்பிரிவு மாணவிகள். (18534)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள பற்றிய விபரம் வருமாறு:-

மாலை 4.00 மணிக்கு - யுத்காமல் வி.க. எதிர் உதயசூரியன் வி.க.

மாலை 5.15 மணிக்கு - சென்மேரிஸ் வி.க. எதிர் சென் நீக்கிலஸ் வி.க.

☆ ☆ ☆

வலி.வடக்கு,மே29

அரியாலை சாந்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறுகிறது. விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் மானிப்பாய் கட்டுடை விநாயகர் வி.கழகமும் இணுவில் அண்ணா வி.கழகமும் மோதுகின்றன.

(ஒ-86-5)

## வேலையாள் தேவை

(பெண்)

குருநகரில் இயங்கும் பிரபல வீடியோ சென்ரறில் வேலை செய்வதற்கு பெண்பிள்ளை ஒருவர் தேவை.

முகவரி:

613, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (18531)

# மென்பந்து கிரிக்கெற்றில் யாழ்.அணி இரண்டாமிடம்

யாழ்ப்பாணம்,மே29

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்ட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் முள்ளியவளை வித்தியானந்தா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

திருமலை மாவட்ட அணியும், யாழ் மாவட்ட அணியும் மோதிய இவ் இறுதியாட்டத்தில் திருமலை மாவட்ட அணி யாழ்.மாவட்ட அணியை 3விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணி நிர்ணயிக்கப்பட்ட 15ஓவர்களில் 5விக்கெட் இழப்பிற்கு 80ஓட்டங்களைப் பெற்றது. இதில் பாஸ்கரன் 39ஓட்டங்களையும், வசந்த் 21ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு 81 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய திருமலை மாவட்ட அணி 13.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அவ் அணியின் சார்பாக சிராக் ஆட்டமிழக்காமல் 29ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ். அணியின் பந்து வீச்சில் கோபிநாத் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். (ஒ-5)

### வலிகாமம் கல்வி வலய

# தடகளப் போட்டியில் தெல்லிப்பழை முதலிடம்

மல்லாகம்,மே29

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் தெல்லிப்பழைக் கோட்டம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

வலிகாமம் வலயப் பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற தடகளப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இதில் தெல்லிப்பழைக் கோட்டம் முதலாம் இடத்தையும் சங்கானை மற்றும் சண்டிலிப்பாய்க் கோட்டங்கள் முறையே 2 ஆம், 3 ஆம் இடத்தையும பெற்றுக் கொண்டன.

(ஒ-5-ரி)

# மாகாணமட்டப் போட்டிகள் 4 கட்டங்களாக இடம்பெறும்

வலிகாமம்தெற்கு,மே29

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஜூன்மாதம் 8ஆம் திகதிமுதல் ஜூலை மாதம் 4ஆம் திகதிவரை நான்கு கட்டங்களாக திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜூன் மாதம் 8ஆம் திகதி உடற்பயிற்சிப் போட்டிகள் முதற்கட்டமாக திருகோணமலையில் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து ஜூன் மாதம் 16ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை இரண்டாம் கட்டமாக கரப்பந்தாட்டம், எல்லே, கபடி மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளும் வவுனியாவில் நடைபெறவுள்ளன.

• ஆண்களுக்கான கரப்பந்தாட்டம், மென்பந்தாட்டம், உதைபந்தாட்டம், எல்லே மற்றும் ஆண்கள் பெண்களுக்கான சதுரங்கப் போட்டிகள் ஜூன் மாதம் 21ஆம் திகதிமுதல் 29ஆம் திகதிவரை மூன்றாம் கட்டமாக திருகோணமலையிலும் இடம்பெறுவுள்ளன.

மெய்வன்மைப்போட்டிகள் நான்காம் கட்டமாக ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை திருகோணமலையிலும் நடைபெறும் என தெரியவருகின்றது.

(ஒ-152)

# சமாதான விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே29

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள வடக்கு, கிழக்கு சமாதான விளையாட்டு விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ்.வரவுள்ளார்.

விளையாட்டுத் துறையின் மூலம் இனவுறவைக் கட்டி வளர்க்கும் நோக்கத்துடன் இந்த சமாதான விளையாட்டு விழா அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. முதல் சமாதான விளையாட்டு விழா கடந்த வருடம் அம்பாறையில் நடத்தப்பட்டது.

அதற்கு அடுத்தபடியாக சமாதான விளையாட்டுவிழா யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதிமுதல் நான்கு தினங்கள் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 2 ஆம் திகதி யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-5)

## பருத்தித்துறை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய ஒப்பந்தகாரரிடமிருந்தும், இவ்வேலை நிறைவேற்றத் தகுதியுடையது என உறுதிப்படுத்தும் சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| படிவ விநியோகம் | 11.06.2003ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை |
| படிவம் ஏற்றல் | 12.06.2003ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை |
| படிவம் திறத்தல் | 12.06.2003ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு |

அட்டவணை

| வேலை விவரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு | படிவக் கட்டணம | வற்வரி |
|---|---|---|---|
| 1. பொன்னம்பலம் வீதி புனரமைப்பு | 1,000/= | 100/= | 20.00 |
| 2. மாதா கோவில் வீதி புனரமைப்பு | 3,700/= | 100/= | 20.00 |
| 3. வடலியடி வீதி புனரமைப்பு | 3,700/= | 100/= | 20.00 |
| 4. மணல்வீதி புனரமைப்பு | 4,000/= | 100/= | 20.00 |
| 5. மாமுனை வீதி புனரமைப்பு | 3,000/= | 100/= | 20.00 |
| 6. கருகம்பன் கொல்களம் திருத்தம் செய்தல் | 600/= | 100/= | 20.00 |
| 7. 2 ஆவது படை தார் ஊற்றுதல் 7 வீதிகள் 750 ஸ்கொயர் | 2,500/= | 100/= | 20.00 |

கேள்விகள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு "செயலாளர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி" என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமோ அல்லது சபையின் கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ குறித்த திகதியின் முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விவரங்களைக் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அ.அ.நடராசா,
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி.

பருத்தித்துறை பிரதேச சபை,
தலைமை அலுவலகம், புலோலி.
27.05.2003 (சி-28130)


# புரோட்டினெக்ஸ்

நாள்தோறும் இழக்கும்
சக்தியை மீட்டுத்தருகிறது

100% தாவரப் புரதம்

விட்டமின்களும் கனியுப்புக்களும் அடங்கியது
கொலஸ்ரோல் அற்றது



# உதவி வழங்கும் மாநாட்டில் புலிகளை கலந்துகொள்ளச்செய்ய நோர்வே முயற்சி

## பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தி என்கிறார் பீரிஸ்

கொழும்பு,மே29

ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப் புலிகளும் கலந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இது தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று செய்தியாளர்களிடம் கூறினார்.

இதுதொடர்பாக அமைச்சர் மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் ஜூன் 9ஆம், 10ஆம் திகதிகளில் ஜப்பானில் நடைபெறும் உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் அமெரிக்கா உட்பட 35 நாடுகளும் சர்வதேச ரீதியில் உதவி வழங்கும் 20 பொது அமைப்புக்களும் கலந்து கொள்கின்றன.

இம்மாநாட்டில் ஒவ்வொரு நாடுகளில் இருந்தும் உயர் அந்தஸ்துள்ள அதிகாரிகளே கலந்துகொள்வார்கள். அமெரிக்க அரசாங்கத்தின் சார்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சாட் ஆர்மிடேஜ் கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாநாட்டுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

நாம் எதிர்பார்த்ததைவிட கூடுதலான உதவிகள் இம்முறை கிடைக்கும என்பது உறுதி. 20 வருடகால யுத்தம் பேரழிவினால் சீரழிக்கப்பட்டுள்ள இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு இந்தநிதி பயன்படுத்தப்படும்.

அதேவேளை, மாநாட்டின்பின் 11 ஆம் திகதி ஜப்பான் முதலீட்டாளர்களைக் கவரும் வகையில் 'யுத்த நிறுத்தத்தின்பின் இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் தொடர்பான பாரிய விவரண கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' - இவ்வாறு அவர் சொன்னார்.

### தென்மராட்சி மாணவருக்கு சீருடை முத்திரை இன்றுமுதல் விநியோகம்

தென்மராட்சி,மே29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இவ்வருடம் தரம் ஒன்றில இணைந்து கொண்ட மாணவர்களுக்கான இலவச சீருடை முத்திரைகள் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ளன என்றும் -

பெற்றோர்கள் இன்று வியாழக் கிழமை தொடக்கம் தத்தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் சீருடை முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-117)

# இரத்தினபுரி, மாத்தறை மாவட்டங்களில் மீண்டும் மண்சரிவுகள் ஏற்படும் ஆபத்து!

கொழும்பு,மே29

இரத்தினபுரி, மாத்தறை மாவட்டங்களிலுள்ள பல இடங்களில் மண்சரிவுகள் ஏற்படக்கூடிய ஆபத்து இன்னமும் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே, அப்பகுதியிலுள்ள மக்களை பாதுகாப்பான வேறு இடங்களுக்குச் செல்லுமாறு இடர் முகாமைத்துவ அலுவலகம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

பஸ்கொட பிரதேச செயலாளர் பிரிவில் 20 இ[illegible]களிலும் கொடபொல பிரதேச செய[illegible]ளர் பிரிவில் 9 இடங்களிலும் இந்த மண் சரிவு அபாயம் எதிர்நோக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி பிரதேசத்தில் 12 செயலாளர் பிரிவுகளிலும் நிவித்திகல பிரதேசத்தில் 6 செயலாளர் பிரிவுகளிலும் மண்சரிவு ஆபத்து இருந்து வருகிறது.

இந்த ஆபத்தை அடுத்து மாத்தறை, இரத்தினபுரி மாவட்டங்களிலிருந்து சுமார் 335 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் அப்பகுதிகளுக்குத் திரும்பி வர விரும்புகின்றனர் எனவும் ஆயினும் மீண்டும் பலத்த மழை பெய்யுமேயானால் அப்பகுதிகள் பாதுகாப்பானவையாக இருக்கமுடியாது எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். (எ)

# ரயில் நிலைய அதிபர்கள் வேலை நிறுத்தம்; நீர்கொழும்பு - புத்தளம் சேவைகள் பாதிப்பு

கொழும்பு,மே29

கொழும்பு - புத்தளம் மார்க்க ரயில் நிலைய அதிபர்களின் வேலைநிறுத்தம் காரணமாக நேற்று ரயில் சேவைகள ஸ்தம்பித்தன.

நீர்கொழும்பு ரயில் நிலைய அதிபரை நேற்றுமுன்தினம் இரவு பயணிகள் கோஷ்டியொன்று தாக்கியுள்ளது. இதனால் ரயில் நிலைய அதிபர்கள் நேற்றுக் காலை முதல் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

நீர்கொழும்பு வரை நேற்றுக காலை சில ரயில் சேவைகள் மட்டும் நடைபெற்றன. புத்தளத்தில் இருந்து ரயில் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை. நீர்கொழும்பு முதல் புத்தளம வரையிலான ரயில் நிலையங்கள் அனைத்தும் நேற்று இழுத்து மூடப்பட்டிருந்தன.

நீர்கொழும்பு ரயில் நிலைய அதிபரைத் தாக்கிய பயணிகள் கைதாகும் வரை வேலைநிறுத்தம் தொடருமென ரயில் நிலைய அதிபர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம்; பொதுச் சேவை ஆணைக்குழு அங்கீகாரம்

வடக்கு - கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் அங்கீகாரத்தை மத்திய பொதுச் சேவை ஆணைக்குழு வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்ற அரசின் தீர்மானத்தை அடுத்து மத்திய ஆணைக் குழு அதற்கான அங்கீகாரத்தை வழங்கியதாகவும், உரிய நடவடிக்கையின் பொருட்டு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கும் மாகாண கல்வி அமைச்சுக்கும் அது அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்தார் என்று தொண்டர் ஆசிரியர் சங்க இணைப்பாளர் எஸ். சந்திரகுமார் தெரிவித்துள்ளார். (எ)


## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 4 - 1953 | 28 - 05 - 2003 |

**திருமதி சிவமணி கதிர்காமநாதன்**

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த எமது சங்க வர்த்தக முகாமையாளர் திரு.சீ.கதிர்காமநாதன் அவர்களின் அருமை மனைவியாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்வதோடு, அமரரின் ஆத்மா சாந்திக்[illegible]ாகவும் பிரார்த்திக்கின்றோம்.

*வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூட்டுறவுச்சங்கம், நீர்வேலி.*

பணிப்பாளரும், பணியாளர்களும், பொதுச்சபை உறுப்பினர்.

(C/28143)

## 5ஆம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

அமரர் சுப்பையா ஆறுமுகராசா

(ஞான வயிரவர் ஆலய பரிபாலகர், கொக்குவில் பிரம்படி)



| தவப்பேறு | சிவப்பேறு |
|---|---|
| 08 - 08 - 1932 | 23 - 05 - 1998 |

அன்பே ஆருயிரே ~ அத்தா

இனிக் காண்பது எங்கே?

கொக்குவில். (18537)

சரோஜினிதேவி ஆறுமுகராசா(மனைவி), உறவினர்கள்.

## IN MEMORIAM

**MRS. INDRANI KIRUPARAJ**

FOND REMEMBRANCES OF OUR DEAREST MOTHER



| BORN | CALLED TO REST |
|---|---|
| 29 - 4 - 1925 | 29 - 4 - 2003 |

FOUGHT A GOOD FIGHT
FINISHED MY COURSE
KEPT MY FAITH - 2 TIMOTHY 4-7

24, Eachchamoddai Road, Jaffna. (18540)

Loving Children
Suhanya Daniel,
Sudharshan Mary Shama
Amesha Revd Anandarajan

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - காரைநகர்
## கேள்வி அறிவித்தல்

புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற தலைமைப் பணிமனைக் கட்டடத் தொகுதிக்கு இரும்பினாலான சுருக்குக்கதவுகள் செய்வதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன. மேற்படி துறையில் தகுதி வாய்ந்தவர்கள பின்வரும் விவரப்படி சுயமாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 'தலைவர், ப.நோ.கூ.சங்கம், காரைநகர்' என்ற முகவரிக்கு 10.6.2003 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

| வேலையின் விவரம் | சதுர அடி ஒன்றின் விலை |
|---|---|
| இரும்புச்சட்டத்தினாலும் தகட்டினாலும் செய்யப்பட்ட சுருக்குக்கதவு | |

கேள்விப்பத்திரம் அனுப்புவோர் மேற்படி வேலையின் முழுவிவரத்தையும் அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் யாவும் 12.6.2003ஆம் திகதி காலை 10மணிக்கு கேள்விச்சபைமுன் திறக்கப்படும்.

(C/28142)

தலைவர்,
ப.நோ.கூ.சங்கம்,
காரைநகர்.

## கமரா விற்பனைக்கு

வீடியோ - கமரா
(Digital TRV - 530 E)
விற்பனைக்கு உண்டு.

**சேகர் மோட்டோர்ஸ்**
118, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(18536)

## ராஜா யாழ்ப்பாணம்

மூன்றாவது வாரம்
விஜய், மீராஜஸ்மின், கருணாஸ்



புதிய கீதை

காட்சிகள் :10.30, 2.30, 6.30,
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30
(C/27626)

## லிபேட்டி அச்சுவேலி

ஸ்ரீகாந்த், பூமிகா, விவேக், ரகுவரன், ராதிகா நடித்த



ரோஜாக் கூட்டம் (ரீலெஸ்)

காட்சிகள் தினசரி 11.00, 3.30, 7.00 (பு.நே.)

## நிறைஞ்சனாஸ் சுன்னாகம்

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, நாகேஸ், வீ.கே.இராமசாமி நடித்த

**இரகசியப் பொலீஸ் 115** (ரீலெஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
CASTAWAY
(C/27808)

## நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார், சுகன்யா, ரகுவரன் நடித்த

**கேப்டன்** (ரீலெஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விஷேடகாட்சி 7.00 (பு.நே.)
(18512)


## மரண அறிவித்தல்கள்

### காசிப்பிள்ளை கந்தசாமி

(இளைப்பாறிய தபால் ஊழியர், தபாலகம், புங்குடுதீவு)

புங்குடுதீவு, 7ஆம் வட்டாரம், ஊரதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய காசிப்பிள்ளை கந்தசாமி நேற்று (28.5.2003) புதன்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆசிரியர் நல்லதம்பி - நல்லதங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் தர்மாம்பிகையின்(ராணி) அன்புக் கணவரும் சுதர்சன்(லண்டன்), பகிரதன்(ஜேர்மனி), சுகிராஜ்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சிவலோஜினி(லண்டன்), சோபாஜினி(ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் யோகம்மா (ஜேர்மனி), திருநீலகண்டன்(யாழ்ப்பாணம்), இராசலிங்கம்(ஜேர்மனி), மார்க்கண்டு(ஜேர்மனி), ஆனந்தன்(ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும் அபினாவின்(லண்டன்) பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31-05-2003 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா.திருநீலகண்டன் (சகோதரன்),
இல.14, விதானையார் லேன்,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

கொழும்பு - T.P.: 01 345323 (18539)

### திருமதி துரைராஜா பார்வதிப்பிள்ளை (பொன்னாபரணம்)

நல்லூர், வீரமாகாளி அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி துரைராஜா பார்வதிப்பிள்ளை அவர்கள் நேற்று (28.05.2003)புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா (சட்டம்பியார்)-திருமதி செல்லம்மா முத்தையாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற Dr.துரைராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமநாதனின்(பரமசாமி) அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வரதராஜா மற்றும் அபயராஜா(கிறிஸ்ரி), வரதலஷ்மியின் அன்புத் தாயாரும் சந்திராவதி, அழகேஸ்வரி, சோமசூரியசிங்கம் ஆகியோரின் மாமியாரும் நந்தகுமார்(FRANCE), திருமதி நந்தினி ஸ்ரீதரன்(SWISS), உதயகுமார்(FRANCE), சுரேஸ்குமார்(FRANCE), வசந்தகுமார்(LONDON), நிலானி, தர்ஷினி ஆகியோரின் அப்பம்மாவும் ஜனார்த்தனன், ஜனித்திரா, காண்டீபன், செந்தூரன் ஆகியோரின் அம்மம்மாவும் பிருந்தா, ராஜ்குமார், அனித்தா(FRANCE), கீர்த்தனா, திஷோத்(SWISS), மைந்தன், மைதிலி(FRANCE) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2003) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு "சிங்கம்ஸ் இல்லம்" ஸ்ரேஷன் வீதி,கோண்டாவில் மேற்கில உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிங்கம்ஸ் இல்லம்"
ஸ்ரேஷன் வீதி,
கோண்டாவில் மேற்கு. (18538)

தகவல்:
P.S.சிங்கம்(மருமகன்)
(சிங்கம்ஸ் பார்மஸி)

# இரு தரப்பிலும் நெகிழ்ச்சிப்போக்கு தேவை என்கிறது ஐ.ஒன்றியம்

சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினரும் நெகிழ்ச்சிப்போக்குகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியான இலங்கைக்கான இத்தாலியத்தூதுவர் இது தொடர்பான அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

டோக்கியோ மாநாட்டிலும் பேச்சுவார்த்தைகளிலும் விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளாதது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தனது கரிசனையை வெளிப்படுத்துகின்றது.

விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கத்துக்கும் இடையே நடைபெற்றுவரும் பேச்சுக்களை ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

டோக்கியோ மாநாட்டில் இருதரபினரும் கலந்து கொண்டு வரலாற்று சிறப்பு மிக்க வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## உதயன் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடவேண்டியதுதானே. அதை விடுத்து அதனைப்பற்றி விமர்சிக்கவேண்டிய தேவை உதயனுக்கு இல்லை.

அமெரிக்காவைப் பற்றி விமர்சித்து விட்டு பின்னர் அமெரிக்க அதிகாரிகள் யாழ்.வரும்போது அவர்கள் பற்றிய செய்திகளை சேகரிப்பதற்காக பின்னால் செல்வதற்கு உங்களுக்கு வெட்கமில்லையா?

எங்களை விமர்சித்துவரும் உங்களுக்கு செய்தி தெரிவிக்கவேண்டிய தேவை எமக்கில்லை. தெரிவிக்கமாட்டோம். எனவே, நீங்கள் இங்கிருந்து வெளியேறிவிடுங்கள்.

இதை நான் (பத்மினி இராஜதுரை) சொன்னேன் என்று உங்கள் ஆசிரியருக்கும் நிர்வாக இயக்குநருக்கும் போய்ச்சொல்லுங்கள்".

- இவ்வாறு உதயன் ஆசிரியர் மற்றும் நிர்வாக இயக்குநரின் பெயர்களைக் குறிப்பிட்டு சீறிவிழுந்தார் பத்மினி இராஜதுரை.

*ஆசிரியர் குறிப்பு:-*

1) உதயன் உண்மைக்குப் புறம்பான செய்திகளை பிரசுரித்திருந்தால் அதைச் சுட்டிக்காட்டி மறுப்பதற்கு அமெரிக்கத் தூதரகத்துக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் உரிமை உண்டு. அத்தகைய மறுப்புகள் கிடைத்து அவற்றில் அர்த்தம் இருந்திருந்தால் உதயன் தவறாமல் பிரசுரித்திருப்பான். ஆனால், அத்தகைய மறுப்பு ஏதும் அண்மைக் காலங்களில் அமெரிக்கத் தூதரகத் தரப்பிலிருந்து உதயனுக்குக் கிடைக்கவில்லை.

2) ஜனநாயக விழுமியங்கள், கருத்துச் சுதந்திரம், அதனை மதித்தல் போன்றவை குறித்து இப்போதெல்லாம் அதிகம் பீற்றிக்கொள்ளும் நாடு அமெரிக்கா. அந்தநாட்டின் தூதரக அதிகாரி ஒருவர் இப்படி நடந்துகொண்டமை மனவருத்தத்துக்குரியது.

3) உதயன் உண்மைக்குப் புறம்பாக வெளியிட்ட செய்திகள் பற்றிய விளக்கத்தை அமெரிக்கத் தூதரகம் எழுத்துமூலம் முன்வைத்தால் அதைப் பிரசுரிக்க உதயன் தயாராக உள்ளான்.

4) அத்தகைய விளக்கத்தை தூதரகம் சமர்ப்பிக்காதவரை, மேற்படி தூதரக அதிகாரி உதயன்மீது சுமத்திய குற்றச்சாட்டுகுறித்து தீர்ப்பு எழுதும் பொறுப்பை உதயன் வாசகர்களாகிய உங்களிடமே விட்டுவிடுகிறோம். (ஆ-ர்)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயம் தொடர்பாக ஒஸ்லோ மாநாட்டில் புலிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்தியபின் இடைக்கால நிர்வாக சபைக்கு மாற்றீடாகவே சிரான் அமைப்பு உருவாக்கப்பட்டது.

'சிரான்' எதையும் செய்யவில்லை என்று கூறிவிடமுடியாது. எனினும், நடவடிக்கைகள் மந்தமாக இருந்தன என்பதை அரசு ஒப்புக்கொள்கின்றது. அதேவேளை, புலிகளின் கோரிக்கைகளை அங்கீகரிக்கும் வகையில் அரசின் நிலைப்பாட்டையும் ஆலோசனைகளையும் புலிகள் முன் சமர்ப்பித்துள்ளோம். தமிழீழ விடுதலைப் புலிகள் இவற்றை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை அரசுக்குண்டு.

சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே அரசு புலிகளை மீண்டும் பேச்சுக்களில் ஈடுபடுத்தவும் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்யவும் மிகவும் அக்கறையுடன் செயற்படுகின்றது.

புலிகளின் கோரிக்கைகள் அடங்கிய கடிதம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் மூலம் மூன்று தினங்களுக்கு முன்னர் பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக சமாதானப் பேச்சுக்களில் அனுசரணையாளர்களான விடர் ஹெல்கிஸன், எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் பிரதமருடனும் அதேவேளை புலிகள் தரப்பினருடனும் தொடர்ந்து பேச்சுக்களை நடத்துகின்றனர்.

எரிக்சொல்ஹெய்ம் கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் தலைமையுடனும் இவ்விடயம் தொடர்பாகப் பேசுவார்.

அகதிகள் மீள்குடியேற்றம், உட்கட்டமைப்புப் பாதை, விவசாய விஸ்தாப்பு, வீடமைப்பு, பாடசாலை மற்றும் சுகாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நிர்வாக அமைப்பு முறை ஒன்றை அமைக்கும் ஆலோசனையும் பிரதமரின் பதில் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட 'சிரான்' அமைப்பின்படி, அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி உலக வங்கியினூடாகவே நிர்வகிக்கப்படும் - என ஒஸ்லோ மாநாட்டில் இணக்கம் காணப்பட்டது. எனினும், இவ்விடயத்தில் சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டதாலேயே 'சிரான்' செயற்பாட்டில் தாமதம் ஏற்பட்டது - இவ்வாறு அவர் கூறினார். (ஐ-4)

SUBRA
சித்தன்கேணி
பேச்சு சிங்களம்
சரளமாக உரையாட
எழுத வாசிக்க
✳ 10 மணிநேர வகுப்பு
✳ உத்தியோகத்தர்களுக்கு மட்டும்
✳ சனி - ஞாயிறு - 6 p.m. - 8 p.m.
இன்னும் சொற்ப அனுமதியே
கட்டணம் ரூபா 750/=
ஆசிரியர்: லீலாகிருஷ்ணன்
(சிங்கள விரிவுரையாளர்)
(0281251)

CHEMISTRY CENTRE
பலாலி வீதி, கந்தர்மடம்.
A/L 2005
GENERAL CHEMISTRY
ஆரம்பம்: 30.05.2003
Mon., Fri. 3-4 p.m.
சேதன இரசாயனம்
ஆரம்பம்: 02.06.2003
Mon.. 6.30-7.30 a.m.
By: அன்பழகன்
(c/28113)

BRIGHTMAN
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
BY: BRITTO
ஆரம்பம்: 31-05-2003
SAT 10.00a.m.
(sat/sun - 10.00a.m.)
(18471)

2004 ஆம் ஆண்டு
க.பொ.த. (உ/த)
பௌதிக பரீட்சைக்கான
வினா - விடை மீட்டல் வகுப்பு
ஆரம்பம்: 31.05.2003
சனி 3.00 பி.ப.
யோகானந்தா
40, இராசவீதி,
கல்வியங்காடு, நல்லூர்.
(18533)

## கொடிகாமத்துக்கான நடமாடும் செயலக தினங்களில் மாற்றம்

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் கொடிகாமம் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடத்தப்பட்டு வரும் நடமாடும் செயலக சேவை தினங்களில் அடுத்த மாதம் தொடக்கம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். ஜுன் மாதம் தொடக்கம் மாதத்தின் முதலாம், நான்காம் செவ்வாய்க்கிழமைகளில் நடமாடும் செயலக சேவை இடம்பெறும் என்றும் - அவர் தெரிவித்தார். (எ-117)

## 'லக்ஸ்பிறே' பால்மா விலைகள் அதிகரிப்பு

'லக்ஸ்பிறே' பால்மாவின் விலை கடந்த திங்கள்முதல் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி, 400கிராம் பக்கெட்டின் விலை 117 ரூபா 50 சதத்திலிருந்து 125 ரூபாவாகவும், ஒரு கிலோ பக்கெட்டின் விலை 288 ரூபாவிலிருந்து 295 ரூபாவாகவும், 250 கிராம் பக்கெட்டின் விலை 78ரூபாவிலிருந்து 88ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. உலகச் சந்தையில் பால்மாவின் விலை உயர்ந்திருப்பதே இந்த விலை அதிகரிப்புக்கான காரணம் என்று லங்கா மில்க் பூட் நிறுவனம் தெரிவிததுள்ளது. (எ)

## கோப்பாயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின் பாய்ந்த கம்பியிலிருந்து விடுவித்து அவரை அவசரமாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். எனினும் அவர் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வேல்முருகு ஜெயந்தன் (வயது 22) என்ற இளைஞரே உயிரிழந்தார். இவர் தொழில் நிமித்தம் கோப்பாய் பகுதியில் தங்கியிருந்தார் எனக் கூறப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்ற பிரேத பரிசோதனையின் பின் இவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மின் கம்பத்தின் பாதுகாப்புக்காக நிறுவப்படும் கம்பியில் எவ்வாறு மின் பாய்ந்தது என்பது தெரியவில்லை. அப்பகுதியில் மரங்கள் வளர்ந்து மின் இணைப்பு வயர்களை மூடியிருந்தன என்று கூறப்படுகிறது. (ஐ-72)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்குத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

இவ்விகாரம் குறித்து புலிகள் தரப்புகளுடன் தொடர்புகொண்டு கேட்டபோது மௌனமே பதிலாக வந்தது. (ஐ)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய எரிபொருள் விநியோக நிலையம் ஒன்றை மறுசீரமைக்கும் பணிகளைத் தொடக்கி வைத்தார். அவர் இன்று திருமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களைப் பார்வையிடவுள்ளார். (ஐ)

## 41 குடும்பங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாரங்கள் தெரிவித்தன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பெற்ற பின்னர் வவுனியா அகதிமுகாம்களில் இருந்து முல்லைத்தீவுப் பகுதிக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் மீளக்குடியமரச் சென்றது இதுவே முதற்றடவை எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-164)

# கசிப்பு வழக்குக் குற்றவாளிக்கு மீளாய்வில் தண்டனை அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், மே29

3 லீற்றர் கசிப்பு வைத்திருந்தமைக்காக சாவகச்சேரி நீதிமன்றினால் நபரொருவருக்கு 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் மேல் நீதிமன்றில் மீளாய்வு மனுச்செய்தார். அதனை விசாரித்த மேல்நீதிமன்ற நீதிபதி சம்பந்தப்பட்ட நபருக்கு 1 வருட கடூழியச்சிறைத் தண்டனை வழங்கியுள்ளார்.

வரணி, இடைக்குறிச்சியைச் சேர்ந்த கந்தையா தங்கராசா என்பவருக்கு கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காக சாவகச்சேரி நீதிமன்றினால் 6 மாத கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை மீளாய்வு செய்யுமாறு கோரி யாழ்.மேல் நீதிமன்றில் அவர் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனுவை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்வரதராசா விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். விசாரணையின் முடிவில் நீதிபதி சம்பந்தப்பட்ட நபருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதித்தார். தீர்ப்பில் நீதிபதி தெரிவித்ததாவது:- தற்பொழுது கசிப்பின் கொடூரமான பிடியில் சிக்கி எமது சமூகம் தத்தளித்துக்கொண்டிருக்கின்றது. எதிரி இரண்டாவது முறையாக இக்குற்றத்தைப் புரிந்துள்ளார். அதனால் இதைவிடக்கூடிய தண்டனையை வழங்கவேண்டும். ஆகவே எதிரிக்கு 5 வருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கிறேன். 10 ஆயிரம் ரூபா செலுத்தத் தவறின் மேலதிகமாக ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ஒ-8)

# அச்சுவேலி பிரதேச செயலர் பிரிவு அமைக்கும்படி கோரித் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே29

கோப்பாய் பிரதேச செயலகத்தில அடங்கும் பிரதேசத்தைப் பிரித்து அச்சுவேலியைத் தலைமையிடமாகக கொண்ட புதிய செயலர் பிரிவை உருவாக்கக்கோரும் தீர்மானம் கோப்பாய்ப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இக் கூட்டம் கோப்பாய் பிரதேச செயலாளர் ஸ்ரீநிவாசன் தலைமையில் செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், விடுதலைப் புலிகளின் வலி.கிழக்குப் பிரதேசப் பொறுப்பாளர் யாழவன், கிராம சேவையாளர்கள், திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர். கோப்பாய் பிரதேச செயலகத்தின் கீழ் அடங்கும் பகுதியைப் பிரித்து அச்சுவேலியைத் தலைமையகமாகக் கொண்ட புதிய பிரதேச செயலர் பிரிவை நிறுவக் கோரும் தீர்மானம் இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அத்துடன் இத்தீர்மானத்தை யாழ்.அரச அதிபருக்கு கோரிக்கையாக விடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. (ஒ-ரி)

## ஊர்காவற்றுறையில் இரு வீதிகள் புனரமைப்பு

மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு குண்டும் குழியுமாகக் காணப்பட்ட ஊர்காவற்றுறை - சுருவில் வீதி, நாரந்தனை - கரம்பொன் வீதி ஆகியன புனரமைக்கப்படவுள்ளன.

அடுத்தமாதம் முற்பகுதியில் [illegible] கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகும் என வீதி அபிவிருத்தி திணைகள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

மேற்படி இரண்டு வீதிகளும் பலத்த சேதமடைந்திருந்தமையால் இந்த வீதிகள் ஊடாக பயணஞ்செய்த வாகனங்களும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தமை தெரிந்ததே.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்சி)

அடுத்து அதற்குக் கீழ் ஒரு நிர்வாகக் கட்டமைப்பு (சபை) இருக்கும். இந்தக் கட்டமைப்பில் அரச அதிகாரிகள் இடம்பெறுவர். அந்த அதிகாரிகளை பிரதமரே நியமிப்பார்.

உயர் மட்டக் குழுவின் ஆலோசனைக்கு அமைய அரசாங்க அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் தொடர்புபடுத்தி அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதை இந்த நிர்வாகக் கட்டமைப்புக்கான சபையே கவனிக்கும்.

உயர் மட்ட ஆலோசனைக்குழு மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்கான சபை ஆகியவற்றுக்குமேல் விசேட ஆணையாளர் ஒருவர் இருப்பார். அவரையும் பிரதமரே நியமிப்பார். பெரும்பாலும் ஓய்வுபெற்ற மூத்த அதிகாரியாக அவர் இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

இந்தக் கட்டமைப்பின் கீழான செயற்பாடுகள் உதவிவழங்கும் நாடுகளின் குழுவினால் அங்கீகரிக்கப்படவேண்டும். இல்லையேல், உரிய வெளிநாட்டு நிதி உதவியைப் பயன்படுத்த முடியாது போகும். அது மீளப்பெறப்பட்டுவிடும்.

- இவ்வாறு அரசின் பதில் யோசனையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதில் பின்வரும் விடயங்கள் முக்கியமாக அவதானிக்கப்படவேண்டியவையாக உள்ளன.

★ தங்களின் அதிக பங்களிப்புடனான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பையே புலிகள் கோரினர். அதற்கு இது கிட்டவும் வரவில்லை.

★ உயர் மட்டத்தில் நியமிக்கப்படுவது வெறும் ஆலோசனைச் சபையே அதற்கு அதிகார வலு இல்லை. அதில்கூட புலிகளின் பிரதிநிதித்துவம் தெளிவுபடுத்தப்படவில்லை.

★ நிர்வாக அதிகாரமுடைய கட்டமைப்புச் சபைக்கு அரச அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பும் பிரதமரிடையே உள்ளது. அதிலும் புலிகளின் பங்கு இல்லை.

★ தலைமை அதிகாரி போன்று நியமிக்கப்படும் விசேட ஆணையாளரும் புலிகளின் பிரதிநிதியாக இருக்கப்போவதில்லை. அவரையும் பிரதமரே நியமிப்பார்.

★ திட்டங்களை அங்கீகரித்து நிதி அங்கீகாரம் வழங்கும் பொறுப்பும் உதவும் நாடுகளின் குழுவோடு பிணைக்கப்பட்டு அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

- இவை புலிகளை திருப்திப்படுத்தும் அம்சங்களாக அமையுமா என்பது கேள்விக்குறியே. (ஐ)

நாங்கள் வழிகாட்டுகிறோம்
C#
C++
Java
Visual C++
Visual Basic
Visual Foxpro
CC
தகுதியும் திறமையும் மிக்க நீண்ட கால அனுபவமுடைய விரிவுரையாளர்களின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
Diploma in Computer Programming
Diploma in Information Technology
Diploma in Desktop Publishing
Diploma in Web Designing
And Certificate Courses
விபரங்களுக்கு: இயக்குநர், கணனிக் கல்லூரி.
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.